அருள் தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாய்

www.thirukalyanamatha.com



மலர் 4 இதழ் 10 அக்டோபர் 2013

இணைந்து ஜெபிப்போம்! இணைந்து பணியாற்றுவோம்!!

# ஆசிரியரின் அருளுரை



திருக்கல்யாணத்தாய் இதழின் ஆர்வமிக்க வாசகர்கள் அனைவருக்கும் இதயப்பூர்வமான ஆசிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தமாத இதழ் ஜெபமாலை சிறப்பிதழாக வெளிவருகிறது. அன்னை மரியாள் நமக்குத் தந்துள்ளது இருபெரும் கொடைகள்; ஒன்று நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மற்றொன்று ஜெபமாலை. உலகத்துன்பங்களில் சிக்கித் தவித்து இறைவனின் துணையை நாடி வாழும் உள்ளங்களுக்கு நம்பிக்கையும், ஆறுதலும் தந்து தேற்றுவது ஜெபமாலை ஆகும். ஜெபமாலையில் உள்ள ஒவ்வொரு மணியும் நம் ஆன்மாவை இறைவன் அருகில் அழைத்துச் செல்லும் படிக்கட்டுகள் ஆகும். இதயத்தில் உள்ள பாரங்களை இறைவன் பாதங்களில் இறங்கி வைத்து அமைதியைப் பெற ஜெபமாலை ஜெபம் நமக்கு உதவுகிறது.

எனவே ஒவ்வொரு குடும்பங்களிலும் அனுதினமும் ஜெபமாலை ஜெபிப்போம். ஒவ்வொருவர் கையிலும், பையிலும் ஜெபமாலை இருக்கட்டும். இது கத்தோலிக்க கிறிஸ்தவ மக்களாகிய நமக்கு நம் இறை அன்னை தந்த விலைமதிப்பற்ற செல்வம். அதைப் பேணிக்காப்போம்.

சோர்ந்து போகாமல் ஜெபிக்க நமக்கு உதவும் கருவி ஜெபமாலை. அதன் ஒவ்வொரு மணியையும் தொட்டு நாம் ஜெபிக்கும் போது இறைவன் அருகில் நாம் நெருங்கிச் செல்கின்றோம். அன்னையின் திருத்தலம் அமைந்துள்ள பொற்பைநகர் நோக்கி எதிர்பார்ப்புடன் வரும் ஒவ்வொரு குடும்பமும் எண்ணிலடங்கா ஆசிகளைப் பெற்று நன்றி நிறைந்த உள்ளங்களோடு இல்லம் செல்ல வாழ்த்துகிறேன். ஒவ்வொரு சனிக்கிழமை தோறும் அன்னையின் திருப்பாதங்களை குடும்பத்தோடு வணங்கி வாழ்வில் வளம் பெறுவோம்.

உங்களுக்காக அன்னையிடம் வேண்டுதல் செய்து உங்கள் குடும்ப நலனுக்காக செபிக்கின்றேன்.

அன்புடன்

திருத்தல அதிபர்

பொத்தக்காலன்விளை.

இயேசுவுக்கே புகழ்! இயேசுவுக்கே நன்றி!!



# உலகத் திருச்சபை

**"இயேசு ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் ஒரு பணியை வைத்துள்ளார்" திருத்தந்தை :**

"இயேசு தம்மைப் பின் செல்லுமாறு நம்மை அழைப்பது அதற்கென ஒரு நோக்கத்தைக் கொண்டது. அதனாலேயே அவர் நம்மை நோக்கி 'முன்னேறிச் செல், அஞ்சாதே' என்ற உறுதியை வழங்குகிறார். நம் வாழ்வில் நுழையும் இயேசு நம் இதயத்தைத் தாண்டிச் செல்லும் போது நம்மை அழைப்பது மட்டுமல்ல,நமக்கான பணியையும் தருகிறார். அதுவே நம் மறைப்பணி" என திருத்தந்தை பிரான்சிஸ் எடுத்தியம்பினார்.

**"தூய ஆவி மற்றும் இயேசுவின் கொடையே கிறிஸ்தவ நம்பிக்கை" திருத்தந்தை :**

"கிறிஸ்தவ நம்பிக்கை என்பது எதிலும் நல்லதையே எதிர்நோக்கும் மனநிலை அல்ல. மாறாக, அது தூய ஆவி மற்றும் இயேசுவின் கொடை.கிறிஸ்தவனுக்கு நம்பிக்கை என்பது இயேசுவே" என்ற திருத்தந்தை, "கிறிஸ்துவுக்கும், தேவையிலிருக்கும் இறை மக்களுக்கும் அருகாமையில் இருக்கும் அருள் பணியாளர்கள்,நம்பிக்கையின் அடையாளங்கள் மட்டுமல்ல,இயேசுவில் இந்த நம்பிக்கையின் படி வாழ்பவர்கள்" என்றார்.


**"நம் செப முயற்சிகளை பிரிவினைகளை மேற்கொள்ளும் நோக்கில் ஆழப்படுத்துவோம்"**

இந்தியாவின் கேரளாவிலிருந்து வந்திருந்த மலங்கரா ஆர்த்தடாக்ஸ் சிரியன் கிறிஸ்தவ சபைத் தலைவர் இரண்டாம் பசிலியோஸ் மார்த்தோமா பவுலோஸ் அவர்களையும்,அவருடன் வந்த குழுவையும் சந்தித்த திருத்தந்தை மலங்கரா ஆர்த்தடாக்ஸ்சிரியன் கிறிஸ்தவசபையும்,கத்தோலிக்கத் திருச்சபையும் ஒரே திருப்பலி மேடையை பகிரும் நாள் வரவில்லை எனினும்,கிறிஸ்தவ ஒன்றிப்பு,அது குறித்த கலந்துரையாடல் போன்றவைகளை இணைந்து நடந்த இவ்விருவருக்கும் பொதுவாக இருக்கும் விசுவாசமே உதவுகின்றது என்று திருத்தந்தை பிரான்சிஸ் கூறினார்.

**கிறிஸ்தவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் :**

திருமணம் என்னும் திருவருட்சாதனம், திருச்சபையோடு கிறிஸ்து கொண்டுள்ள ஒன்றிப்பின் அடையாளமாக இருக்கின்றது. மணமகன் மணவிருந்தினர்களோடு இருக்கும் போது நோன்போ, சோகமாகவோ இருக்கமுடியாது. அதுபோல கிறிஸ்தவர் அடிப்படையிலே மகிழ்ச்சியானவர்,கிறஸ்தவ வாழ்வு இதயத்தின் மகிழ்வை கொண்டிருக்கின்றது.

நன்றி. நம்வாழ்வு







12/09/2013 அன்று மாலை மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்டநிதிக்குழுக்கூட்டம் நடைபெற்றது.

13/09/13 அன்று மாலை மணப்பாடு திருச்சிலுவை நாதர் ஆலய திருவிழா மாலை ஆராதனை மேதகுஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

14/09/13 அன்று காலை மணப்பாடு திருச்சிலுவை நாதர் ஆலய திருவிழா திருப்பலி மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

21,22/09/13 ஆகிய இரு நாட்களும் மேதகு ஆயர் அவர்கள் ஏரல் புனித சூசையப்பர் பங்கு மக்களை சந்தித்து உரையாடினார்கள்.

23/09/13 அன்று மாலை மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட பல்நோக்கு சமூக சேவை சங்க நிர்வாகக் குழு கூட்டம் நடைபெற்றது.

24/09/13 அன்று காலை மேதகு ஆயர் அவர்கள் தலைமையில் மறைமாவட்ட கல்வி குழு கூட்டம் நடைபெற்றது.

28,29/09/13 ஆகிய இரு நாள்களும் மேதகு ஆயர் அவர்கள் வேளப்பட்டி பங்கு மக்களை சந்தித்து உரையாடினார்கள்.

30/09/13 அன்றுமாலை ஜீவஜோதி இல்லத்தில் மேதகுஆயர் அவர்கள் தலைமையில் நம்பிக்கை ஆண்டு கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

மறைவட்ட அளவிலான குருக்களுக்கான மாதந்திரதியானம் குறுக்குச்சாலை, தூத்துக்குடி ஆயர் இல்லம், அடைக்கலாபுரம், வடக்கன்குளம் ஆகிய இடங்களில் நடைபெற்றது.

மறைவட்ட அளவில் ஞாயிறு மறைக்கல்வி ஆசியர்களுக்கான விவிலிய கருத்தரங்குகள் தூத்துக்குடி நற்செய்தி நடுவம் குறுக்குச் சாலை கார்மெல் பணியகம், வள்ளியூர் திசையன்விளை உலக இரட்சகர் ஆலயவளாகம், சாத்தான்குளம், திருச்செந்தூர் ஜீவா நகர் ஆகிய இடங்களில் வைத்து நடைபெற்றன. இதில் அனைத்து பங்குகளிலும் உள்ள ஞாயிறு மறைக்கல்வி ஆசிரியர்கள் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள்.

நன்றி–மறைமாவட்ட செய்திகள்



# பங்குசெய்திகள்

1.9.13 விவிலிய மாத துவக்க விழா ஞாயிறு திருப்பலியுடன் பங்குத்தந்தை அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது. பங்குதந்தை அவர்கள் விவிலியத்தை பவனியாக எடுத்து வைத்து அலங்கரிக்கப்பட்ட பீடத்தில் வைத்தார்கள் விவிலிய மாதத்தை எவ்வாறு கொண்டாடலாம் என்பதை பற்றிய கருத்துகளை அன்பியங்களும்பக்தசபைகளும்தெரிவித்து இருந்தார்கள். அவையாவன.

1. திருமணிஆராதணை. 2.வினாடிவினாகலைநிகழ்ச்சிகள்நடத்துதல்.
3. தியானம்,ஒப்புரவுஅருட்சாதனம்ஏற்பாடுசெய்தல்.
4. அனைவரும்திருப்பலிக்குவிவிலியம்கொண்டுவரஊக்குவித்தல்.
5. விவிலியத் தேர்வு,கண்காட்சி,கலந்துரையாடல், நாடக அறங்கேற்றம், மனப்பாடம்போட்டிகள்நடத்துதல்.
6. விவிலியம்பற்றிவிளக்கங்கள்கொடுத்தல்.
7. இறைவார்த்தைஅடங்கியஅட்டைகள்வழங்குதல்.
8. விவிலியம்அனைவரும்வாங்கிடஉதவிசெய்தல்.
9. பொதுஇடங்களில்விவிலியவாசகங்கள்அமைத்தல்.
10. வீடுகளில்விவிலியஅரங்கேற்றம்செய்தல்.

8.9.2013 கடந்த வார வழிபாட்டை சிறப்பித்தவர்கள் புனித சூசையப்பர் அன்பியம், திருக்கல்யாண மாதா அன்பியம், குழந்தைஇயேசு அன்பியம். இந்த அன்பியங்கள் சார்பாக காலை அனைவருக்கும் சர்க்கரை பொங்கலும், மதியம் சிக்கன் பிரியாணியும் வழங்கப்பட்டது. மதிய உணவுக்கு முன் பங்குத்தந்தை தலைமையில் நற்கருணை ஆசிரும் அதை தொடர்ந்து அன்னையின் பிறந்த நாள் கேக் வெட்டியும சிறப்பாக கொண்டாடப்பட்டது.

ஞாயிறு மறைக்கல்வி மாணவ மாணவிகளுக்கு 1முதல் 5-ம் வகுப்புவரை இறைவார்த்தை ஒப்பித்தல் போட்டியும் 6முதல் 12-ம் வகுப்பு வரை - இறைவார்த்தை கதைப் போட்டியும் நடைபெற்றது. இரவு நற்கருணைஆசிர்ருக்கு பிறகு புனித தொன்போஸ்கோ இளைஞர் சபையின் சார்பாக பள்ளி வளாகத்தில் வைத்து தேவசகாயம் பிள்ளையின் வாழ்க்கை வரலாறு படமும், திருத்தல வரலாறுபடமும்திரையிடப்பட்டது.

11.09.2013 நான்கு சந்தி கெபியில் மாலையில் திருப்பலி நடைப்பெற்றது.

14.09.2013 மாலை திருக்கல்யாண மாதா திருத்தலத்தில் நவநாள்திருப்பலிநடைபெற்றது.

15.09.2013 - கடந்த வார வழிபாட்டை சிறப்பித்தவர்கள் அன்னை தெரசா அன்பியம், புனித பிரகாசியம்மாள் அன்பியம், புனித உபகார மாதா அன்பியம். திருப்பலி நிறைவுற்றவுடன்

அனைவருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது. இரவு பங்கு மக்கள் அனைவருக்கும்அசனவிருந்துநடைப்பெற்றது.

20.09.2013 –அன்று கிளைப்பங்கு நவமுதலூர்,புனித உபகாரமாதாஆலயத்திருவிழாகொடியேற்றம்சாத்தான்குளம்வட்டார முதன்மைக்குரு பேரட்திரு.எட்வர்ட் அடிகளார் தலைமையில், பங்குத்தந்தை அருட்திரு.பபியான் ஜோசப், திருத்தொண்டர் டேவிட் வளன்அவர்கள்முன்னிலையில்நடைபெற்றது.

21.09.2013 – அன்று புனித மரியன்னை துவக்கப்பள்ளி, புனித வளனார்பெண்கள் துவக்கப்பள்ளி ஆகிய இரண்டு பள்ளிகளும் இணைந்து விவிலிய மாதத்தை சிறப்பாக கொண்டாடினார்கள். பங்குத்தந்தை தலைமையில்.திருத்தொண்டர்,அருட்சகோதரிகள் ,தலைமையாசிரியர்,ஆசிரியப்பெருமக்கள்,மாணவமாணவிகள், பெற்றோர்கள்கலந்துக்கொண்டு இவ்விழாவினைசிறப்பித்தார்கள். .இவ்விழாவில் மாணவ மாணவியர் கலை நிகழ்சிசிகள் நடைப்பெற்றது. மேலும் போட்டியில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்குபரிசுகள்வழங்கப்பட்டது.

22.09.2013–கடந்தவாரவழிபாட்டைசிறப்பித்தஅன்பிங்கள் அந்தோணியார் அன்பியம்,செபஸ்தியார் அன்பியம், லூர்துமாதா அன்பியம். அன்றுஇரவு பங்கு மக்கள் அனைவருக்கும் அசன விருந்து நடைபெற்றது.

29.09.2013–அன்று காலை கிளைப்பங்கு நவமுதலூர் புனித உபகாரமாதா ஆலய அர்ச்சிப்பு விழாவும்,அதைத் தொடர்ந்து புனித உபகாரமாதா திருவிழா சிறப்பு ஆடம்பர திருப்பலியும் அருட்திரு.Y.Dராஜன் அவர்கள் தலைமையில் ,பங்குத்தந்தை அருட்திரு.பபியான் ஜோசப், திருத்தொண்டர் டேவிட் வளன் அவர்கள் முன்னிலையில்நடைப்பெற்றது.

30.09.2013 –அன்றுகாலைகிளைப்பங்குநவமுதலூர்புனித உபகாரமாதா ஆலய அசனவிழா திருப்பலியும்,மாலை அசன விருந்தும்நடைபெற்றது.

**7.9.2013 முதல்சனி வழிபாடுகளில் காலையில் பொங்கல், குளிர் பானங்கள் வழங்கிய உள்ளங்களுக்கு நன்றிகள்**

**ரஸ்னா வழங்க உதவி செய்தவர்கள்**

| | |
|---|---|
| சின்னா துரை (பொற்பை) | – 200 |
| ஜான்சன் (பொற்பை) | – 500 |
| பெயர் சொல்லாத நபர் | – 100 |
| கிங்ஸ்டன் (பொற்பை) | – 500 |
| பீற்றர் (பொற்பை) | – 500 |
| குட்டி (சென்னை) | – 500 |
| திலகர் (பொற்பை) | – 500 |
| ஜஸ்டின் பிரிட்டோ (பொற்பை) | – 500 |
| தாசன் (பொற்பை) | – 500 |
| புஸ்குட்டி (பொற்பை) | – 500 |
| ஜெகதீஸ் (மிடாலம்) | – 2000 |
| செல்டன் (பொற்பை) | – 200 |
| வெலிங்டன் (பொற்பை) | – 300 |
| ரவிஸ்டர் (பொற்பை) | – 1000 |

**பொங்கல் வழங்க உதவி செய்தவர்கள்**

| | |
|---|---|
| தேனிட்டெஸ் (பொற்பை) | – 2500 |
| தேஜஸ் பிரின்ஸ் ஒயிட் | – 2500 |

**10மூடை தண்ணீர் உதவி செய்தவர்கள்**

சின்னதம்பி (எ) இனமுத்து

பூலோக பாண்டி (நரையன்குடியிருப்பு)



# திருச்செபமாலை

**முன்னுரை:**
கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகிய நமக்கு கிடைத்த பெரிய பொக்கிஷம் நம் மரியன்னை. ஆம் மரியன்னை மனுக்குலத்தின் வாடாமலர். தேவனின் பூமகள்; ஆண்டவர் இயேசு சூடிக் கொண்ட பூமாலை தான் மரியன்னை. இந்த பூமாலை விரும்பும் பாமாலை திருச்ஜெபமாலை.

**ஜெபமாலைஎன்றால்என்ன?**

ஜெபமாலை என்பது ஆண்டவர் இயேசுவின் வாழ்க்கை மற்றும் அன்னை மரியாளின் வாழ்க்கை பற்றிய தொடர். தியான நற்செய்தியின் அடிப்படையில் மறையுண்மைகளை தியானிப்பது மரியாளின் புகழ்ச்சி கீதம் ஓர் அனுதின உணவு. நம் விசுவாச வாழ்வில் இறைவனோடு நம்மை இணைக்கும் ஆற்றல்மிகு கருவி ஜெபமாலை.

**ஜெபமாலையின் புனிதம் மற்றும் பக்தி!**

ஜெபமாலை மிகவும் புனிதமானது. புண்ணியங்களையும், நற்கிரியைகளையும்வளர்க்கும்ஆற்றலுள்ளது.புனிதஜெபமாலைஆன்மாக்களுக்கு மிக ஏராளமான தேவ இரக்கத்தைப் பெற்றுத்தரும், ஆன்மாக்கள் கடவுளை நேசிக்கும்படி செய்யும். ஜெபமாலையால் ஆன்மாக்கள் தங்களை புனிதப்படுத்தி கொள்ள விரும்புகின்றன. இத்தகைய புனிதத் தன்மை கொண்ட ஜெபமாலையை நாம் பக்தி உருக்கத்தோடும், விசுவாசத்தோடும் தியானிப்பது மிக அவசியமாகிறது. ஜெபமாலையை தியானிக்கும்போது, மனமறிந்து பராக்குகளுக்கு இடமளிப்பது , மரியாதை குறைவாகி நம்மை பாவத்துக்கு உட்படுத்தும். மரியாதையற்ற முறையில் தியானிப்பது சாபமாக மாறிவிடுகின்றது. ஒவ்வொரு தேவ இரகசியத்திலும் இயேசுவுக்கும், மரியன்னைக்கும் இடையே உள்ள தொடர்பை ,சித்திரமாக மனதில் பதித்து ,தியானித்து ஒப்புக் கொடுக்கப்படும். அருள்நிறை மந்திரங்களை ,நமது வலது பக்கத்தில் இருக்கும் காவல்சம்மனசு எடுத்துச் சென்று இயேசுவுக்கும், மரியன்னைக்கும் மகுடமாக சூட்டி அவற்றைப் புனிதப்படுத்துகின்றார். மாறாக கவன மின்றியும், பக்தியின்றியும் , மரியாதைக் குறைவாகவும் சொல்லப்படும் அருள் நிறை மந்திரங்களை ,நமது இடதுபக்கத்தில் இருக்கும் பிசாசு, உடனே கொள்ளையடித்து. தன் மரணப்புத்தகத்தில் குறித்து நம் வாழ்நாளைக் குறைக்கின்றது. ஆகவே ஜெபமாலை பக்தி மிகவும் அவசியமாகிறது. ஜெபமாலை பக்தியால் உயிர்தப்பியவர் அல்போன்ஸ் என்னும் மன்னர்ஆவார்.

**முடிவுரை:**

திருத்தந்தை பாப்பரசர் 12ம் பத்திநாதர் அவர்கள் "தேவ உதவியைப் பெற மிகப் பொருத்தமான ஆற்றலுள்ள கருவியாக ஜெபமாலை மதிக்கப்படுகிறது" ஜெபமாலையின் மலர்கள் ஒரு போதும் அழிவதில்லை என்று கூறுகின்றார் . ஆகவே நாம் மரியன்னைக்கு அஞ்சலியாக செலுத்தும் மணம் கமழும் மலர் மாலைகளை விட ஜெபமாலை ஜெபித்து, தியானிப்பது தான் ,நாம் மரியன்னைக்கு செலுத்தும் மேலான அஞ்சலியாகும்.

M.மிக்கேல்உஷா,பொற்பை.

## புனித ஜெபமாலை அன்னை:

நம் அன்னை மரியாள் அளித்த திருகாட்சிகள் பல, அவற்றுள் லூர்துமாதா, பாத்திமாமாதா, தேவரகசிய ரோஜாமாதா ஆகிய காட்சிகளில் எல்லாம் மாதா ஜெபமாலையை திருக்கரம் ஏந்தி காட்சி தருகிறார். இவற்றுள் குறிப்பாக, 1571ம் ஆண்டு ஜெபமாலை ஆண்டாக அறிவிக்கப்பட்டது.1917ம் ஆண்டு அக்டோபர் மாதம் 13ம் தேதி மரியன்னை பாத்திமாவில் மூன்று சிறுவர்களுக்கு ஆறுமுறை காட்சிதந்து **"நானே திருச்ஜெபமாலை மாதா"** என்று தன்னை வெளிப்படுத்தி, இங்கு என்பெயரால் எனது மகிமைக்காக ஆலயம் ஒன்று கட்ட வேண்டுமென்றும், உலகிற்கு சமாதானம் பெற்றுக் கொள்ளவும், யுத்தம் முடிவடையவும் ஒவ்வொரு நாளும் ஜெபமாலை சொல்ல வேண்டுமென்றும், மனிதர்கள் தங்கள் வாழ்வை திருத்த வேண்டும். தங்கள் பாவங்களுக்கு மன்னிப்பு கேட்க வேண்டுமென்றும் கூறினார்கள்.

படை எதற்கு? பகையை உடைப்பதற்கு அன்னை ஜெபமாலை கரம் இருக்க பயம் எதற்கு? என்பதற்கு ஏற்ப நம் திருத்தந்தை பாப்பரசர் 12ம் பத்தி நாதர் அவர்கள் தேவ உதவியைப்பெற,மிகப் பொருத்தமான ஆற்றலுள்ள கருவிதான் ஜெபமாலையின் மலர்கள், ஒரு போதும் அழிவதில்லை.என்றும் வாடாதமாலை திருச்ஜெபமாலை என்பதை உணர்வோம்.

ஜெபமாலை அன்னையை போற்றி புகழ்ந்திடுவோம்.

J.அனிட் ரோஸ் மேரி, சங்கரன் குடியிருப்பு

## ஜெபித்திடுவோம் ஜெபமாலை



*அகிலத்திருச்சபையே உலகமென்றாகிட,*
*ஆன்ம விசுவாசம் அலகையை வென்றிட,*
*இறையழைத்தல் தழைத்தோங்கிட,*
*ஈடு இணையற்ற திருக்குடும்பங்கள் பெருகிட,*
*உறவுகள் உயிர்கொண்டு உருப்பெற்றிட,*
*ஊரெல்லாம் இறைவார்த்தை பகிர்ந்திட,*
*எதிர்மறை போதனைக்காரர் மறையுண்மை கண்டிட,*
*ஏதேன் தோட்டத்தில் இறைச்சொல் கேட்டிட,*
*ஐயம் தகர்த்து தெய்வசித்தம் ஏற்றிட,*
*ஒவ்வொரு நாளும் விசுவாசப்பகிர்வில் வளர்ந்திட,*
*ஓர் மனதாய் இயேசுக்கிறிஸ்துவில் உயிர்கள் மண்டியிட,*
*ஔடதமில்லாத இறைவாழ்வு வாழ ஜெபித்திடுவோம்.*


**ஜெபமாலை!**

திருமதி.விஜிதனசேகர், தூத்துக்குடி.

# ஆச்சரியத்துக்குரிய மாதாவே

ஒரு கன்னியால் (ஏவாள்) இருளடைந்த உலகம், மற்றொரு கன்னியால் (மரியா) அருள் நிறைந்ததாக மாறுகிறது. பழைய ஏற்பாட்டில் தெய்வத்தின் வார்த்தையா – சாத்தானின் வார்த்தையா ? பரமனின் கட்டளையா – பாம்பின் சூழ்ச்சியா ? எது வேண்டாம் என்ற சூழலில், இரண்டிற்கும் இடையே,முதல் கன்னி (ஏவாள்) தனது முடிவு எடுத்தார் அதன் விளைவாக ,மனிதன் வாழ்வு இழந்தான் அவள் கடவுள் வரைந்த கரை கடந்தாள் – விளைவு மனுக்குலமே கறைபட்டுவிட்டது. ஏவாளின் முடிவு இறைசாயலுக்கு சாயம்பூசிய மனிதன் முகமிழந்தவனாய்த் திரிந்தான்.

ஒரு பெண்ணின் முடிவால் முகமிழந்த மனிதன், மற்றொரு கன்னியின் முடிவால் முகவரி பெறுகிறான். ஆணாதிக்கமும் பெண்ணடிமையும் யூத சமுதாயத்தில் புற்றுநோயாக இருந்தது. குருட்டுச் சட்டங்கள் மகளிரை முடமாக்கியது. இந்த அடிமைச் சங்கலிக்குள் இருந்துதான் பெண் ஒருவர் புயலாகப் புறப்படுகிறார். இறைமகன் இயேசுவுக்கே தாயாக உருவெடுக்கிறாள். மாட மாளிகை மங்கையர்கள் மடி திறந்து நிற்கிற வேளையில், தனது கருப்பையில் கடவுள் மனுவுருவாக ஆகட்டும்(லூக் 1:43) என்று கூறி ஆச்சரியத்தின் அன்னையாகிறார் மரியா. ஆண்டவரின் அடிமை (மரியா) எலிசபெத்தைச் சந்திக்கும் போது, எலிசபெத், ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?(லூக் 1:43) என்று கூறி இது கனவா! நனவா! என்று ஆச்சரியத்தை வெளிப்படுத்துகிறார்.



அன்னையை ஆச்சரியத்தின் கன்னி என்று நிசாவைச் சேர்ந்த கிரகோரியார் கூறுகிறார்: அதாவது ஆண்டவரின் தூதர் மோயீசனுக்குக் காட்சி கொடுத்த போது எரிந்து கொண்டிருந்த முட்புதர் தீய்ந்து போகவில்லை கரிந்து போகவில்லை (வி.ப 3:2-3). அது போல் தான் அன்னை மரியா கன்னி கருதாங்கிப் பெற்றெடுத்தாலும், என்றென்றும் கன்னியாக,கன்னித் தன்மையோடு கறைபடாமல் இருக்கிறார். இவ்வாறு ஒரு சாதாரணப் பெண் அசாதாரணப் பெண்ணாக,ஆச்சரியத்தின் அன்னையாக அரியணை ஏறுகிறார்.

(லூக்கா 2:1-7)- அக்காலத்தில் அகஸ்துசீசர்,மக்கள் தொகை கணக்கெடுப்பதற்காக அனைவரும் அவரவர் ஊருக்குச் செல்ல வேண்டும் என உத்திரவிட்டார். அதன்படி கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து , யூதேயாவிலுள்ள பெத்லகேம் என்ற தாவீதின் ஊருக்கு யோசேப்பு மரியாவைக் கூட்டிச் செல்லும் போது,மரியா நிறைமாத கர்ப்பிணியாக இருந்தார் (லூக் 2:6). வாழ்வின் எதார்த்தம், எந்த நிறைமாத கர்ப்பிணியும் இவ்வளவு தூரம் நடந்து சென்று கணக்கெடுப்பில் பங்கெடுப்பதற்கு அவசியமில்லை. ஆனால், மரியா தான் இறைவனின் தாய் என்று சிறப்பு சலுகைக் கேட்கவில்லை. மாறாக தான் ஒரு சாதாரண குடிமகளாக இருந்து நாட்டின் தேவையை நிறைவேற்றி குடிமக்கள் அனைவருக்கும் ஆச்சரியத்தின் அன்னையாகிறாள் (அருள்தந்தை சேவியர் டெரன்ஸ்).

அன்னை மரியாவைப் பின்பற்றித்தான் நாம் அனுதினம் செபமாலை சொல்லிச் செபிக்கிறோம். போர்க்காலத்தில்தான் அமைதி வேண்டி செபமாலை சொல்லிச் செபித்தனர். வாள்களும் கத்திகளும் இரத்தம் குடித்த இடத்தில் வெறும் வாய் செபத்தால் அமைதி ஏற்படுத்திய செபமாலை ஆச்சரிய அன்னையின் வாழ்வை நமக்கு நினைவூட்டுகிறது.

தாயே எங்கள் தஞ்சமே

# குழந்தை இயேசுவின் புனித தெரசாள்



இவள் 1873-ல் பிறந்து 1889-ல் கார்மேல் சபையில் சேர்ந்தாள். 1895-ல் நவ கன்னியரை கண்காணிக்கத் தொடங்கினாள்.9 ஆண்டுகளாக துறவியாய் வாழ்ந்தாள். பெரியோர்களுக்குக் கீழ்ப்படிந்து தன் சுயசரிதையை எழுதி வைத்திருக்கிறாள். அன்புக்கும் சிறந்த பதில் அன்பே என்பது இவளது விருது வாக்கியம். இச்சொற்கள் இவள் கண் முன் என்றும் நின்றன.துன்பங்களைச் சகிக்க இவை இவளுக்குப் பலம் பெற்றுத் தந்தது.கடவுளைத் தந்தையாக மதித்து அன்பு செய்தாள். சிறு பிள்ளையின் கையில் பந்து போல இவள் தன்னைக் கடவுளிடம் ஒப்படைத்தாள்.சிறுவன் பந்தை சுவரில் அடிக்கலாம். தரையில் போட்டு விளையாடலாம். அதேபோல் கடவுள் தம் பிரியம் போல் தன்னை நடத்த இவள் விட்டுவிட்டாள்.

சிறு வயதில் இவள் ஒருமுறை கோவிலுக்குச் சென்று செபிக்கையில் செப புத்தகத்திலிருந்து ஒரு படம் கீழே விழுந்தது.சிலுவையில் தொங்கிய இயேசு அதில் சித்தரிக்கப்பட்டிருந்தார். இயேசுவின் இரத்தம் பலருக்கு வீணாய்ப்போகிறதே என்று அன்றிலிருந்து ஏங்கி வாடினாள். மனந்திரும்ப மறுத்த ஒரு கொலைகாரனை மனந்திருப்பும்படி தனது உணவு ,உறக்கம், வேலை, விளையாட்டுகள் அனைத்தையும் செபமாக மாற்றினாள்.

"பனிக்கட்டி போல் ஆத்துமங்கள் நரகத்தில் விழுந்து சேதமாகிக் கொண்டிருக்கின்றன. நம் இயேசு கண்ணீர் வடிக்கிறார். அவருடைய பத்தினிகளாகிய நாம் அவரது கண்ணீரைத் துடைப்பதற்குப் பதிலாக அற்பக் காரியங்களுக்காக சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோம்" என்பாள்.

இவளுக்குக் காச நோய் வந்தது. "நான் இறந்து போவேன். கணக்குக் கொடுக்க இயேசுவின் முன் செல்வேன். பெரியவர்களிடம் போகும் போது வெறுங்கையோடு போகக் கூடாது. ஏதாவது காணிக்கை கொண்டு போக வேண்டும். நான் செபித்து ஒறுத்தல் செய்து மனந்திரும்பிய ஒரு பாவியின் ஆன்மாவை என் கையில் எடுத்து செல்வேன். என் முயற்சியால் நரகத்தில் ஓர் ஆள் குறைந்தது மோட்சத்தில் ஓர் ஆள் அதிகரித்தது எனக் காணும் இயேசு உடனே என்னை மோட்சத்துக்கு எடுத்துக் கொள்வார்" என்று தெரேசாள் தன் அக்காளுக்கு எழுதினாள்.

"மோட்சத்துக்குப் போன பின் அங்கு நான் சும்மா இருக்க மாட்டேன்.பூமி மீது ரோஜா மலர் மாரி பொழிவேன். அதாவது ஏராளமான புதுமைகள் செய்வேன்" என்று சொன்னபடி புதுமைகள் செய்து வருகிறாள்.

# சிலுவையடியில் திருக்கல்யாணத் தாய்



யோவான் 19-25 சிலுவை அருகில் இயேசுவின் தாயும் தாயின் சகோதரியும் குளோபாவின் மனைவியுமான மரியாவும், மகதலாமரியாவும் நின்று கொண்டிருந்தனர். இயேசுவுக்கு சிலுவை மரணம் ஏற்படப் போகின்றது என்றதுமே இது உமக்கு நேரிடக் கூடாது என்று பேதுரு சொன்னார். இயேசுவைப் பிடித்தவுடனே சீடர்கள் ஓடிப் போய் விடுகிறார்கள். பேதுருவும் தூரத்தில் பின் தொடர்ந்தார். இயேசுவோடு மூன்று ஆண்டு காலம் வாழ்ந்தவர் இயேசுவோடு உண்டு உறங்கியவர், இப்போதோ இயேசுவை விட்டுவெகு தூரத்தில் பின் சென்று கொண்டிருக்கிறார். அதனால் அவரை மறுதலிக்கவும்,மறுக்கவும், சபிக்கவும் சத்தியம் பண்ணவும் வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டது.

பல வேளைகளில், பிரச்சினைகளும், நெருக்கடிகளும், துன்பங்களும் நம்மைச் சூழும் போது முதலாவதாக நம் இருதயம் ஆண்டவரோடு அருகில் அவர் நமக்கு உதவி செய்யும் படி அவருக்குப் பக்கத்தில் இருக்கிறதா என்பதைத்தான் நாம் ஆராய வேண்டும். ஊதாரி மைந்தன் தன் தந்தையை விட்டு தூர தேசத்திற்கு புறப்பட்டு விலகிப் போனதால்தான் அவனுக்கு வாழ்வில் குறை ஏற்பட்டது. அதே போன்று ஆண்டவரே விட்டு விலகிப்போனதால் தான் பேதுருவுக்கும் அந்த கதி ஏற்பட்டது.

தி. பாடல் 22.ஆண்டவரை விட்டு விலகிப் போன தாவீதும் இது போன்று அழுது புலம்புகிறான் என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர். எனக்கு உதவி செய்யாமலும் நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கின்றீர்? என்று சொல்லி ஆண்டவரை விட்டு தூரமாய் விலகிப் போன தாவீது அழுது புலம்புகிறான்.

ஆனால் தி பாடல் 91-15 என்னைக் நோக்கிக் கூப்பிடுவான். அவன் ஜெபத்தைக் கேட்பேன். துன்பவேளையில் அவனோடு இருப்பேன். அவனைத் தப்புவித்துப் பெருமைப்படுத்துவேன். நீடிய வாழ்வினால் அவனுக்கு மன நிறைவு தருவேன். என்கிறார், நம் ஆண்டவர்.

தி பாடல் 118-5,7 நெருக்கடியான வேளையில் நான் ஆண்டவரை நோக்கி மன்றாடினேன். ஆண்டவரும் எனக்குச் செவி கொடுத்து என்னை விடுவித்தார். ஆண்டவர் என் பக்கம் இருக்க நான் ஏன் அஞ்ச வேண்டும். மனிதர் எனக்கு எதிராக என்ன செய்ய முடியும் ? எனக்கு துணை செய்யும் ஆண்டவர் என் பக்கம் உள்ளார். என்னை வெறுப்போர்க்கு நேர்வதைக் கண்ணாரக் காண்பேன் என்கிறார் தாவீது.

அன்னை மரியாள் வாழ்ந்த காலத்திலும் இயேசு செய்த அற்புதங்கள் புதுமைகளின் போது அதிகமாக அவரோடு இருக்க மாட்டார். மாறாக துன்ப வேளையில், பாடுகளின் மத்தியிலும் அவர் அவரை விட்டு விலகவில்லை. அவரோடிருந்தார். ஆகவேதான் அவர் விண்ணக மண்ணாக அரசியாக உலக மாந்தர்க்கெல்லாம் தாயாக முடி சூட்டப்பட்டு இன்றும் இறைவனோடு இருந்தார். நாமும் அன்னை மரியாளைப் போன்று சிலுவையினருகே அவரை விட்டு தூரப் போகாமல் இருக்க வேண்டும். நமக்கு இரட்சண்யம் தரக்கூடியது சிலுவை தான் அவரை நோக்கிப் பார்க்கின்றவர்கள் ஒரு நாளும் வெட்கப்பட்டுப்போவதில்லை. இன்றும் பாடுகள், சோதனைகள் துன்பங்கள் நடுவிலும் சிலுவையினண்டை யிருப்பவர்கள் பலர் உண்டு. அவர்களுக்கு மீட்பு உண்டு. (தொடரும்).

அன்னையின் அடிமை

# திருக்கல்யாணத் தாய் திருத்தல முதல்சனி வழிபாடு

# (7.9.2013)



திருக்கல்யாணத்தாய் திருத்தலத்தில் செப்டம்பர் மாத முதல் சனி வழிபாட்டு நிகழ்வுகள் 7.09 2013 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. காலை 9.30மணிக்கு ஜெபமாலையுடன் வழிபாடு ஆரம்பமாகியது. அதன்பிறகு அருட்திரு.**பீட்டர்பால்** அடிகளார், குணமளிக்கும் ஜெபவழிபாட்டு ஆராதனையை நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஆலயத்தை சுற்றி அன்னையின் சப்பரப்பவனி நடைபெற்றது. நவநாள் ஜெபம், விண்ணப்பங்கள் ஒப்புக்கொடுத்தல்,திருப்பலி கருத்துகள் ஒப்புக் கொடுத்தல் நடைபெற்றன. அருட்திரு. **அமல்ராஜ்** அடிகளார், அவர்கள் தலைமையில், பங்குத் தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்,** அருட்திரு.**மரியதாஸ்,** அருட்திரு.**பீட்டர்ராஜா,** அருட்திரு.**ராஜா,** அருட்திரு.**பிரிட்டோ,** அருட்திரு.**புஷ்பராஜ்,** அருட்திரு.**ரோஜர்,**அருட்திரு.**கிராசியஸ்,** அருட்திரு.**ரெத்னராஜ்** திருத்தொண்டர் **டேவிட் வளன்** இணைந்து நவநாள் திருப்பலியை சிறப்பு செய்தார்கள்.

திருப்பலியில் அருட்திரு.**பீட்டர்பால்** அடிகளார், மறையுரை ஆற்றினார்கள். திருப்பலி நிறைவு பெற்றவுடன் நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கு நடைபெற்றது. பல்வேறு இடங்களிலிருந்து **180** வாகனங்களுக்கு மேலாகவும் மற்றும் பேருந்துகள் வழியாகவும் சுமார் **14,000** க்கு மேற்பட்ட அன்னையின் பக்தர்கள் கலந்து கொண்டு அன்னையின் ஆசீரைப் பெற்றார்கள். வருகை தந்திருந்த அனைத்து மக்களுக்கும் காலையில் பொங்கலும் அதன்பின் மதியம் வரை குளிர்பானம், குழந்தைகளுக்கு பாலும் அதனைத் தொடர்ந்து திருத்தலத்தின் சார்பாக மதிய உணவும் வழங்கப்பட்டது.

அதன் பின் மாலை 4.00 மணிக்கு இறைஇரக்கத்தின் ஜெப வழிபாடுகள் நடைபெற்றன. அதைத் திருத்தொண்டர் **டேவிட் வளன்** வழி நடத்தினார்கள். அதன்பின்பு பங்குத்தந்தை அருட்திரு. **பபியான் ஜோசப்** தலைமையில் பக்தர்களுக்கு சிறப்புத் திருப்பலியும் அதன்பின் சிறப்பு மாலை ஆராதனையும் நடைபெற்றது.

**– திருத்தல அதிபர்**

## முதற்சனி உணவுப்பொருள் நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| திரு காமராஜ் டெய்ஸி ராணி சாப்பாடுபிளேட் | 10000 |
| ஆண்டனி பெர்கூசன் (இணையம்) | அரிசி 25 கிலோ |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 300 கிலோ |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 100 கிலோ |
| ஜெரோம் குயிண்டின் (கவரப்பேட்டை) | அரிசி 100 கிலோ |
| M.S.R. ஜஸ்டின் (சென்னை) | அரிசி 100 கிலோ |
| சூசை மிக்கேல் (கோவை) | அரிசி 50 கிலோ |
| ஜோசப் செல்வராஜ் (ஈரோடு) | அரிசி 100 கிலோ |
| ரூபி ஸ்டோர் (பொற்பை) | அரிசி 50 கிலோ |
| ராஜேஷ் அமலா (பொற்பை) | அரிசி 50 கிலோ |
| ஜெரால்டு ரவி (மும்பை) | அரிசி 50 கிலோ |
| திருக்கல்யாண் (பொற்பை) | அரிசி 25 கிலோ |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | அரிசி 25 கிலோ |
| அன்னை வேளாங்கண்ணி ஸ்டோர் (திருமங்கலம்) | அரிசி 50 கிலோ |
| ரவீஸ்டர் (பொற்பை) | உருளை3 மூடை |
| | வெங்காயம் 60 கிலோ |
| | தக்காளி 12 பெட்டி |
| | சேணை 60 கிலோ |
| | ப.மிளகாய் 1 மூட்டை |
| | கேரட் 1 மூட்டை |
| துரை (சென்னை) | மாங்காய் 10 கிலோ |
| ஹென்றி (கீழ்மணக்குடி) | அரிசி 25 கிலோ |
| | தேங்காய் 25 |
| ஆரோக்கியம் (பொற்பை) | தேங்காய் 10 |
| குறிப்பிட்ட நபர் | புளி |
| கென்னடி கலா(தூத்துக்குடி) | அரிசி 25 கிலோ |

ஹாசன் பேருந்து காய்கறி வாடகை (நன்கொடையாக)

## முதல் சனி செலவு விபரம் 07.09.2013

| | |
|---|---|
| தூய மிகாவேல் ஆலய பாத்திர வாடகை | 400.00 |
| புனித உபகாரமாதா ஆலய பாத்திர வாடகை | 100.00 |
| யோவான் சமையல் குழு | 13,000.00 |
| அலெக்ஸ் விறகு உடைக்க கூலி | 1500.00 |
| I.சேசு ஜெயராஜ் மற்றும் பணியாளர்கள் | 2600.00 |
| பேச்சியம்மாள் தூய்மைபணி | 2500.00 |
| ஜஸ்டின் மின்னல் தண்ணீர் மூடை 115 | 6440.00 |
| பாஸ்கர் மளிகை | 62911.00 |

| | |
|---|---|
| Y.இருதயராஜ் ரூபிஸ் ஸ்டோர்1 3/4 மூடை அரிசி | 5600.00 |
| ஜெயக்குமார் டிராக்டர் 5 நடை | 1250.00 |
| வின்சென்ட் உணவு விடுதி | 1005.00 |
| இம்மான் வண்டி வாடகை+ தண்ணீர் | 1625.00 |
| மொத்தம் | 98931.00 |

## முதல்சனி மதியஉணவு வரவுசெலவு விபரம்

### வரவு சுருக்கம்

| | |
|---|---|
| முன்னிருப்பு வங்கியில் | 25466.00 |
| கையில் | 302.00 |
| நன்கொடை மூலம் வரவு | 42534.00 |
| முதல்சனி ஏலப் பொருள்கள்மூலம் வரவு | 6195.00 |
| ஜோஸ் குடும்பத்தார் வங்கியில் | 3,000.00 |
| பங்கு தந்தை மூலம் வரவு | 50,000.00 |
| மொத்த | 1,27,497.00 |
| செலவு | 98931.00 |
| இறுதி இருப்பு | 28566.00 |

### இருப்பு விபரம்

| | |
|---|---|
| வங்கியில் | 28,466.00 |
| கையில் | 100.00 |
| இறுதி மொத்தம் இருப்பு | 28,566.00 |

## திருத்தலக்கடை வரவு செலவு விபரம்

| | |
|---|---|
| 31.07.13 அன்று இருப்பு | 3,76,483.00 |
| 01.08.13 முதல் 31.08.13 வரை விற்பனை | 123127.00 |
| | 504610.00 |
| 01.08.13 முதல் 31.08.13 வரை செலவு | 81615.00 |
| | 422995.00 |
| முதல் சனி மதிய உணவு வகைக்கு கொடுத்தது | 56000.00 |
| 31.08.13 அன்று இருப்பு | 3,66995.00 |

-திருத்தலக்கடை நிர்வாகிகள்

### *வாழ்த்துகிறோம்*

| | | |
|---|---|---|
| 11-9-13 | கிதியோன், ஜென்ஸி | -நவமுதலூர் |
| 16-9-13 | பிரகாஷ் ,பிரான்சிஸ் பெனிட்டா | - பொற்பை |




## நன்றிகள் பலகோடிகள் 07.09.2013 முதல்சனி உணவு நன்கொடையாளர்கள்

| | |
|---|---|
| ஜோசப் பாக்கியராஜன் (சிவகாசி) | 1500.00 |
| மெர்வின் | 500.00 |
| கோல்டன் ஆர்ட்ஸ் கிராப்ட்ஸ் | 251.00 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | 1000.00 |
| பெயர் சொல்ல விரும்பாத நபர் | 700.00 |
| லதா திரவியம் | 500.00 |
| ஜாண் ஸ்டீபன் ராஜ் (பொற்பை) | 1000.00 |
| பாஸ்கர் சுந்தர் (அரக்கோணம்) | 100.00 |
| ஆரோக்கியமா (மதுரை) | 130.00 |
| அந்தோணி பாஸ்கர் (பொற்பை) | 500.00 |
| பாலசுந்தரம் | 100.00 |
| ஜெம்ஸ் பார்த்திபன் | 5000.00 |
| குறிப்பிட்ட நபர் (பொற்பை) | 100.00 |
| தாமஸ் அல்போன்ஸ் (திருவிதாங்கோடு) | 360.00 |
| ஹெர்மஸ் பர்னாண்டோ | 500.00 |
| **S.**ரெஜினா மேரி (பொற்பை) | 200.00 |
| **S.K.**ராஜ் (பொற்பை) | 200.00 |
| மனுவேல் ராபின் (கூட்டப்பனை) | 150.00 |
| லூக்காஸ் மளிகை (திருப்பூர்) | 1000.00 |
| ஜெபஸ்டின் ரெனிஷா (மதுரை) | 501.00 |
| குயின்ஸ் பெண்கள் அழகு நிலையம் (சாத்தை) | 500.00 |
| ஜெகன் சங்கர் (பொற்பை) | 1000.00 |
| குட்டி (பொற்பை) | 100.00 |
| ராஜேந்திரன் (பொற்பை) | 100.00 |
| எபரென்ஸ் மேரி சேசுபாலன் (முள்ளூர் துறை) | 930.00 |
| அந்தோணி ராஜ் (பொற்பை) | 500.00 |
| வில்பர்ட் (கன்னியாகுமரி) | 500.00 |
| ஜெரின் ஸ்டோர் (உடன்குடி) | 500.00 |
| அந்தோணிதாஸ் (மரியநாடு) | 1000.00 |
| ஜேசுவடியான் (பொற்பை) | 100.00 |
| அலெக்ஸ்(புன்னகாயல்) | 500.00 |
| பிபின் ஸ்டோபஸ் (கண்டன்விளை) | 1000.00 |
| கிறிஸ்டினா ஆக்னஸ்மேரி | 500.00 |
| ஜெயசீலன் (தென்கிரநூர்) | 200.00 |
| கனகராஜ் (நொச்சிக்குளம்) | 500.00 |
| **G.T.M** அந்தோணிசெல்வன் | 1000.00 |
| சூசை செசன்ராஜ் (பொற்பை) | 300.00 |
| ஜெனிதா ஷைனி (நாகர்கோவில்) | 1000.00 |
| எட்வர்ட் லாரன்ஸ் (பொற்பை) | 200.00 |
| மரியகாகு ராஜா பிரிடா (பொற்பை) | 1000.00 |
| கனிஷ்டா (பொற்பை) | 200.00 |
| சிலுவை சவரியப்பன் (பொற்பை) | 1001.00 |
| ஜோசப் செல்லத்துரை (ஈரோடு) | 100.00 |
| மரிய பானுமதி (பிரகாசபுரம்) | 100.00 |
| சுரேஷ் பாண்டியன் (பொற்பை) | 100.00 |
| பார்த்திபன் லதா (பெரியதாழை) | 5000.00 |
| திவ்யா வினோத் (பொற்பை) | 2500.00 |
| ஜெகன் பியூலா (மறவன் குடியிருப்பு) | 430.00 |
| ஜெபஸ்டின் பிளாரன்ஸ்(கும்பகோணம்) | 500.00 |
| ஜோசப் ஜோதி (சாத்தை) | 1000.00 |
| அல்பின் கரோஸ் ஜோஸ் (சின்னத்துறை) | 1001.00 |
| இஸ்பிரித்தாள் மேரி (குளச்சல்) | 800.00 |
| ஜெயராஜ் கீதா (பொற்பை) | 100.00 |
| அலெக்ஸ் எட்வர்ட் பெலிக்ஸ்(பாளை) | 1000.00 |
| டேவிட் ஜாண் டிமோரிஸ் | 500.00 |
| மேரி ருமேஷா (கொழுந்தட்டு) | 100.00 |
| **M.A.C** சேவியர் (பாளை) | 1250.00 |
| குணசேகரன் (திருச்செந்தூர்) | 200.00 |
| ஜெயராஜ் (பொற்பை) | 500.00 |
| சேவியர் (பொற்பை) | 430.00 |
| மொத்தம் | 42534.00 |

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639 - 261230 , 261330**

**07-09-2013 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | ! | 2473 பேர் |
| குழந்தைபாக்கியம் | ! | 2364 பேர் |
| சுகப்பிரசவம் | ! | 1872 பேர் |
| நற்சுகம்பெற | ! | 2581பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | ! | 2497 பேர் |
| தேவஅழைத்தல் | ! | 1785 பேர் |
| வேலைகிடைக்க | ! | 2104 பேர் |
| தொழில்முன்னேற்றம் | ! | 2310 பேர் |
| குடும்பசமாதானம் | ! | 2517 பேர் |
| குடும்பநலன் | ! | 1816 பேர் |
| உறவினர்நன்மைக்காக | ! | 1570 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | ! | 1638 பேர் |
| அலகைதொல்லைதீர | ! | 1294 பேர் |
| மனஅமைதிக்காக | ! | 2417 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | ! | 1753 பேர் |
| மனமாற்றமடைய | ! | 1534 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | ! | 2179 பேர் |
| நல்லஇல்லம்அமைய | ! | 1614 பேர் |
| சோதனைகளைவெல்ல | ! | 1917 பேர் |
| கடன்தொல்லைதீர | ! | 2443 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | ! | 1295 பேர் |



**அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக வேண்டிக்கொள்ளும்.**
**உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி**

**kalyanamatha@gmail.com**

– பங்குத்தந்தை

## விஞ்ஞான கண்டுபிடிப்பு

### கம்ப்யூட்டர் :

- கம்ப்யூட்டர் ஒரே நேரத்தில் முழுமையாக உருவாக்கப்படவில்லை. அமெரிக்காவைச் சேர்ந்த ஜே.ஜி. பிரெய்னெர்ட், ஜே.டபிள்யூ.மவுச்லி ஆகியோர் 1942 ஆம் ஆண்டு எலக்ட்ரானிக் கம்ப்யூட்டரை உருவாக்கினர்.
- அமெரிக்காவின் சார்லஸ் பாப்பேஜ் டிஜிடல் கம்ப்யூட்டரை உருவாக்கினார். அவரது உதவியாளர் அடா லவ்லேஸ் என்பவரே முதன் முதலில் கம்ப்யூட்டர் புரோக்ராம்களை உருவாக்கியவர்
- இன்றைய நவீன கம்ப்யூட்டரை உருவாக்கிய பெருமை அமெரிக்காவின் ஜான் வான் நியூமான் என்பவரைச் சாரும். அவர் அதை 1945 ஆம் ஆண்டு உருவாக்கினார்.

## ஆகஸ்ட் – 2013 – வரவு செலவு விபரம்

| | | |
|---|---|---|
| **வரவுகள் :** | | |
| முன்னிருப்பு வங்கியில் - 33,570 | | |
| கையில் - 5,873 | 39,443.00 | |
| திருப்பலி 330X70; 49X70 | 26,530.00 | |
| ஞாயிறு காணிக்கை பொற்பை - 10,175 | | |
| கிளை பங்கு - 390 | 10,565.00 | |
| ஆலய உண்டியல்கள் மூலம் | 1,85,360.00 | |
| ஜஸ்டின்-டி-பிரிட்டோ நன்கொடை | 10,000.00 | |
| செல்வின் ஜெஸ்லின் நன்கொடை | 10,000.00 | |
| சந்தன லூக்காஸ் நன்கொடை | 15,000.00 | |
| இதர நன்கொடைகள் | 11,550.00 | |
| ஆலய வீடு வாடகை (ஜீலை ஆகஸ்ட்) | 1,000.00 | |
| பயணிகள் தங்கும் அறை வாடகை | 600.00 | |
| அடக்கம் | 625.00 | |
| பங்களா கோழி விற்றது | 2,200.00 | |
| பழைய மெழுகு விற்றது | 1,320.00 | |
| பழைய வரிகள் மூலம் | 6,870.00 | |
| காணிக்கை பொருட்கள் ஏலவரவு | 2,649.00 | |
| முதல் சனி கடைகள் மூலம் | 4,075.00 | |
| **மொத்தம்** | **3,27,787.00** | |
| **செலவுகள் :** | | |
| முதல் சனி அருட்தந்தையர்கள்கள் படி | | 7550.00 |
| முதல்சனி விளம்பர தொடர்பு- எலிசபெத் | | 500.00 |
| அருட்தந்தை கெனிஸ்டன் T.A (பொ.நி.பணியகம்) | | 2000.00 |
| முதல் சனி மேக்.டிவி விளம்பரம் | | 4000.00 |
| வில்பர்ட் ஊதியம் (மே, ஜீன் மற்றும் ஜீலை) | | 12,000.00 |
| மின்கட்டணம் | | 42,129.00 |
| கோவில்- எலெக்ட்ரிக் பொருட்கள் | | 1,352.00 |
| தொலைபேசி, செல்போன் கட்டணம் &தொலைபேசி சரிசெய்ய | | 961.00 |
| எரிவாயு | | 440.00 |

| | |
|---|---|
| டோபி | 250.00 |
| ஓஸ்தி வாங்கியது | 650.00 |
| மிக்சி மற்றும் எமர்ஜென்சி லைட் சரிசெய்ய | 400.00 |
| டானிக் (சித்தவைத்தியம்) | 3000.00 |
| காய்கறிகள் | 725.00 |
| மளிகை பொருட்கள் | 2,500.00 |
| தண்ணீர் மற்றும் பால் | 1,470.00 |
| சிக்கன் & மட்டன் | 680.00 |
| உதவித் தொகை | 1,400.00 |
| டீசல்,பெட்ரோல் வாகனம் &ஜெனரேட்டர் | 5,097.00 |
| வாகனம் சரிசெய்ய & செக்போஸ்ட் | 390.00 |
| பழங்கள் | 483.00 |
| மருந்து | 1,266.00 |
| தபால் செலவு & ஸ்டேசனரி | 383.00 |
| தொடக்கப்பள்ளி சரிசெய்ய | 4,855.00 |
| ரேசன் பொருட்கள் & Snacks | 275.00 |
| கோவில் உள் புதிதாக பேன் மாட்ட பேன்,பொருட்கள் &கூலி | 26,597.00 |
| பங்குப் பேரவை டீ | 400.00 |
| உபதேசியார் ஊதியம் | 4000.00 |
| சமையல் அம்மா ஊதியம் | 3000.00 |
| இரவுக்காவலர் ஊதியம் | 2500.00 |
| துப்புரவு பணியாளர்கள் ஊதியம் | 7000.00 |
| தொடக்கபள்ளி ஆசிரியர் ஊதியம் | 2000.00 |
| அருட்சகோதரர் படி | 1000.00 |
| பங்குத் தந்தை படி | 6000.00 |
| பங்குத்தந்தை திருப்பலி படி | 1500.00 |
| திருத்தல பங்களிப்பு | 10,000.00 |
| புனித வரி<br>திருப்பலி 379X5=1895.00<br>அடக்கம் 1x 7 = 7.00<br>= 1902.00<br>திருப்பலி 349×50 =17,450.00 | 19,352.00 |
| மொத்தம் | 1,78,105.00 |

| | |
|---|---|
| மொத்த வரவு | ரூ.3,27,787.00 |
| மொத்த செலவு | ரூ.1,78,105.00 |
| இறுதியிருப்பு | ரூ.1,49,682.00 |

இருப்பு விபரம்

| | |
|---|---|
| வங்கியில் | ரூ.1,46,970.00 |
| கையில் | ரூ.2,712 .00 |
| மொத்தம் | ரூ.1,49,682.00 |

– பங்குத்தந்தை

## ஒரு வரி உண்மைகள்

★ மூட்டைப்பூச்சிகடியால்எந்தநோயும்வருவது இல்லை.

★ பெண்மயிலுக்குகொண்டையும்தோகையும்கிடையாது.

★ பறவையினத்தில்ஆண்தான்கவர்ச்சியானது.

★ திமிங்கிலக்குட்டியின்எடைநாளுக்கு100கிலோகூடும்.

★ கழுகுஎதையும்கொல்லாதுஇறந்ததையேதின்னும்.

★ கிளிகளால்அதிகஉயரம்பறக்கமுடியாது.

★ ஒட்டகம்15மணிநேரம்தொடர்ந்துநடக்கும்.

★ தீப்பறவைவேகமாகஓடும்,பறக்கமுடியாது.

★ நாய்களுக்குவியர்ப்பதுஇல்லை.

★ பெண்கொசுமட்டுமேகடிக்கும்.

★ முட்டையிட்டுபால்தரும்விலங்குபிளாட்டிபஸ்




### வரவேற்கிறோம்

இறையாசீராய் எம் இல்லங்களில் பிறந்து பொற்பை திருச்சபையை அலங்கரிக்கும் அன்பு மலர்களே உங்களை பாசமுத்தத்துடன் வரவேற்கிறோம்.

| | | | |
|---|---|---|---|
| 4-2-13 | ஜோஸ்னா கிரேஸ்லின் | மரியகிங்ஸ்லி<br>பிரன்சிலின்திவ்யா | பொற்பை |
| 18-5-13 | வின்ஸ்லின் சிபோரா | அருண்வினோத்<br>மரியதிவ்யமர்ஸ்லின் | பொற்பை |
| 10-2-13 | அர்சித் ஆல்வின் | ஆல்வின்பிரட்ரிக்சேவியர்<br>சகிதாராஜ் | பொற்பை |

# அடைக்கலம் தரும் அன்னை மரியா

நமது முதல் பெற்றோர் கடவுளின் கட்டளையை மீறியதால் மனுக்குலம் முழுவதுமே ஜென்மப் பாவத்துடன் பிறக்க நேர்ந்தது. அத்தகைய பாவ நிழலே அணுகாமல் கடவுளால் பாதுகாக்கப்பட்டு கருவிலே திருவுடையவராய் அமல உற்பவியாக உருவாக்கப்பட்டவர் மரியா.

இயல்பிலேயே உதவும் பண்பும் (லூக் 1:40) பிறர் குறைதீர்க்க விழையும் குணமும் கொண்ட மரியா (யோவான் 2:3) சிலுவை மரணம் வரை இயேசுவை பின் சென்று, அவர் துயரத்தில் பங்கெடுத்து, ஆறுதலாகவும் உடன் இரட்சகியாகவும் விளங்கிய தோடு, சிலுவையடியில் (யோவான் 19:26,27)
நம்மைத் தம் பிள்ளைகளாகவும் ஏற்றுக் கொண்டார்.

வாக்களிக்கப்பட்ட மீட்பரைத் தாங்கிய பேழையாகவும் விண்ணக வாயிலாகவும், விடியலின் விண்மீனாகவும் திகழும் மரியா தன் மகன் மீது கொண்ட அதே அன்பையும் ,அக்கறையையும், தன் திருமகனின் இரத்தத்தால் மீட்கப்பட்ட மனுக்குலத்தின்மீதும் கொண்டிருந்தார். தன் மகன் சிந்திய திருஇரத்தம் ஒரு துளியேனும் வீணாகக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்தார். தொடக்க காலத்தில் மனிதன்,கடவுளின் கட்டளையை மீதி தவறு செய்தபோது தாமே நேரிலும் (தொ.நூல் 18:21) இறைவாக்கினர் வழியாகவும் (உசா மு.12:13,14) கண்டித்து மனிதனை நல்வழிப்படுத்த முன் வந்தார். குறித்த காலத்தில் தன் மகனையே பலியாகத் தந்து தம் வாக்குறுதியை நிறைவேற்றினார். இயேசு விண்ணகம் சென்ற பின் தூய ஆவியாரின் வருகைக்காக காத்திருந்த சீடர்களோடும் மற்றும் பலரோடும் இருந்த அன்னை மரியா (தி.ப.1:14)இயேசுவின் சீடர்களுக்கு அன்னையாகவும், ஆலோசகராகவும் புதிய கிறிஸ்தவர்களுக்கு வழிகாட்டியாகவும் இருந்திருப்பார் என்பதில் ஐயமில்லை.

இந்த இறுதிக்காலத்தில் உலகில் அக்கிரமங்களும், தீச்செயல்களும் மலிந்த போது மரியா தாய்க்குரிய அன்போடு பல இடங்களில் காட்சி கொடுத்து மக்கள் ஜெபம் மற்றும் ஒறுத்தல் முயற்சிகள் செய்து கடவுளின் கோபத்தை தணிக்க வேண்டும் என்று கோட்டுக் கொண்டார்.எ-டு. 1858ம் ஆண்டு பெப்ரவரித் திங்கள் 11ம் நாள் முதல், ஜீலைத் திங்கள் 16ம் நாள் வரை பதினெட்டு முறை பெர்னதத் என்ற சிறுமிக்கு லூர்து மலை அருகில் உள்ள மசபியேல் கெபியில் காட்சி கொடுத்து ஜெபம் ,மற்றும் ஒறுத்தல் முயற்சிகள் செய்ய மக்களை வலியுறுத்துமாறு கேட்டுக் கொண்டார். (எ-டு.2.) பாத்திமா நகரில் 1917 மே திங்கள் 13ம் நாள் முதல் அக்டோபர் திங்கள் 13ம் நாள் வரை லூசியா, ஜெசிந்தா, பிரான்சீஸ் என்ற மூன்று சிறுவர்களுக்கு தொடர்ந்து ஆறு முறை காட்சி கொடுத்து கடவுளை மனம் நோகச் செய்யும் பாவிகளுக்காக ஜெபியுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

அன்புக்குரியவர்களே, மரியாவின் பிள்ளை, அவலமாய் சாகாது என்பது எவ்வளவு பெரிய உண்மை. தூக்கக் கலக்கத்தில் ஜெபித்த சில அருள் நிறை மரியே என்ற ஜெபத்தினால், நரக வேதனையிலிருந்து தப்பியதோடு ரிச்சர்டுக்கு மறை சாட்சியாகும் பேறும் கிடைத்தது. எனில் தினமும் குடும்ப ஜெபமாலை ஜெபிக்கும் மக்களுக்கு தேவதாய் அருளவிருக்கும் அளப்பரிய நன்மைகளை சிந்திப்போம் ஜெபம் செய்வோம், தினம் ஜெபமாலை சொல்வோம்.

மரியே வாழ்க!

பு.மரிய புஷ்பம் ,தட்டார்மடம்

# பொற்பையின் பொற் பை
# திருக்கல்யாண மாதா

பரிசுத்த திருக்கல்யாண மாதா நமக்கு கிடைத்த விலைமதிப்பற்ற பொன்முடிச்சு; புண்ணியங்களின் பொக்கிஷம்; நற்கொடைகளின் நீரூற்று; அருள்மழை பொழிவதில் அமுதசுரபி. அந்தப் புனிதத்தாய் நமக்கு கிடைத்த அதிஷ்டப் பரிசு.

ஆம் திருக்கல்யாணத் தாயை தாயாக ஏற்றுக் கொண்ட நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள். நம் தாயிடம் எது கேட்டாலும் கிடைக்கும். நம் தாயின் புன்னகை நிறைந்த முகத்தை உற்று நோக்கினால் போதும் நம் குறையெல்லாம் தீர்ந்து விடும். நம் தாய் தம் மக்களுக்கு அருளை வாரி வழங்குவதில் வள்ளல்.

நம் அன்னை மரியாள், அன்பு, இறைப்பற்று, எளிமை, தன்னடக்கம், தாழ்ச்சி, கீழ்ப்படிதல், ஆகிய புண்ணியங்களால் நிறைந்து தழும்பும் ஒரு அக்ஷய பாத்திரம்.

செப்டம்பர் 8-ம் தேதி நம் தாயின் பிறந்தநாளைக் கொண்டாடுகிறோம். பரிசுத்த அன்னை மரியாள் சுவக்கீன் அன்னம்மாள் இவர்களுக்கு மகளாகப் பிறந்து நற்பண்புகள் நிறைந்தவளாக,கற்புக்கரசியாக,களங்கமற்றவளாக புண்ணிய வாழ்க்கை வாழ்ந்தவர் இறை வார்த்தையைக் கேட்டு அதன்படி நடந்தாள்.(லூக் 8/21,11/28) அந்த புண்ணிய வாழ்க்கைக்கு அன்னை மரியாளுக்கு கிடைத்த பரிசு "கடவுளின் தாய்" என்னும் பாக்கியம் அதற்கு காரணம் அவளிடம் விளங்கிய புண்ணியங்கள்தான்; அப்படியொரு அற்புதத்தாய். அப்படியொரு பொன்முடிச்சு நமக்கு கிடைத்திருப்பது அவளின் பிள்ளைகளாகிய நாம் செய்த பெரும் பாக்கியம்.

அன்னையின் மக்களாகிய நாம் எந்த இடத்தில், எந்த சூழ்நிலையில் இருந்தாலும் தனித்து தெரிய வேண்டும். நம்மை கடந்து செல்பவர்கள் நம்மைப் பார்த்து இது திருக்கல்யாணத்தாயின் பிள்ளைகள் என்று சொல்லும் அளவிற்கு நாம் புண்ணிய வாழ்க்கையில் மற்றவருக்கு ஒரு முன் மாதிரியாக நம்பர் ஒண்ணாகத் திகழ வேண்டும்.

நம் குழந்தைகள் நாம் கொடுக்கும் பணத்தை சேர்த்து வைத்து நம் பிறந்த நாளுக்குப் பரிசு வாங்கித்தந்தால் நாம் மகிழ்ச்சியின் உச்சிக்கே போய் விடுகிறோம்.நம் மழலைச் செல்வங்களை வாரியணைத்து முத்தமிட்டு ஆனந்தக் கண்ணீர் விடுகிறோம். "வாவ்" சூப்பர் என்று பாராட்டுகிறோம்.

நம் தாய் நம்மிடம் விரும்புவது பொன்னகை நிறைந்த ஆடம்பர வாழ்க்கையை அல்ல. புன்னகை நிறைந்த புண்ணிய வாழ்க்கையை. எனவே நாம் நம் அன்னையிடம் விளங்கிய புண்ணியங்களை அவளிடம் வேண்டிப் பெற்று அவற்றை நம் வாழ்வில் கடைப்பிடித்து அவளின் பெயர் சொல்லும் பிள்ளையாக புண்ணிய வாழ்க்கை வாழ்ந்து நம்மையே அவளுக்கு ஒப்புக் கொடுக்கும் போது அவள் நம்மை வாஞ்சையுடன் அரவணைத்துக் கொள்கிறாள்.

பரிசுத்த திருக்கல்யாணத் தாயின் நற்கொடைகள் நமக்கு தங்குதடையின்றி கிடைக்க அந்த பொன் முடிச்சிலிருந்து நமக்கு தேவையான வரங்களை அள்ளிச் செல்ல நமக்கு தடையாக இருப்பது நமது பாவ வாழ்க்கை. அந்த பாவ வாழ்க்கையை விட்டொழித்து நம் தாயிடம் விளங்கிய புண்ணியங்களை நம் வாழ்வில் கடைப்பிடித்து வாழ்ந்தால் அன்னையின் அருள் நமக்கு தங்கு தடையின்றி கிடைக்கும்.

பரிசுத்த திருக்கல்யாணத் தாயே எங்களை அரவணைத்துக் காப்பீராக!

எங்கள் இதயம் நிறைந்த அன்னைக்கு இதயம் நிறைந்த பிறந்த நாள் வாழத்துக்கள்.

**S.**நிர்மஷா சந்தியாகு ராஜன், மார்க்கம் பட்டி

# எருசலேம்



எருசலேம் நகரத்திற்கு பல பெயர்கள் உண்டு. "கர்த்தரின் நகரம்"என்றும் "தாவீதின் நகரம்"என்றும்,"மகிழ்ச்சியின் நகரம்" என்றும் அழைக்கப்படுகிறது. அரேபியர்கள் இந்த நகரத்தை **"ALQUDES"** ஆல் குடஸ் என்று குறிப்பிடுகின்றனர். இதற்கு புனிதம் (or) பரிசுத்தம் என்பது பொருளாகும்.எருசலேமானது யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும்,முகமதியர்களுக்கும் முக்கிய புனித ஸ்தலமாகக் கருதப்படுகிறது. யூதர்களுக்கு இங்குள்ள மலைமேல் உள்ள ஆலயம் **(Temple Mount)** புண்ணிய ஸ்தலம் ஆகும். கிறிஸ்தவர்களுக்கு ஆண்டவர் தம் ரத்தத்தை சிந்தி உயிர்விட்டு நம்மை இரட்சித்த இடமாகும்.

எருசலேம் நகரம் கடல் மட்டத்திற்கு 750 மீட்டர் மேலே உள்ளது. எருசலேமை சுற்றிக் கட்டப்பட்டுள்ள தற்போதைய சுவரானது முகமதிய மன்னரால் கி.பி.16-ஆம் நூற்றாண்டு கட்டப்பட்டது.இதன் உயரம் சுமாராக 14மீட்டரும், அதன் சுற்றளவு 4கிலோ மீட்டரும் கொண்டதாக உள்ளது. அந்த புதிய சுவருக்கு 8 உட்செல்லும் வாயிற்பகுதிகள் உள்ளன.

- தென்மேற்காக காணப்படும் முதலாவது வழி "சீயோன் வழி".
- "ஜஃபா வழி", மேற்கு பகுதியில் காணப்படும் இரண்டாவது வழி
- மூன்றாவது வழியான" புது வாயில்"
- நான்காவது வழியான" தாமஸ்கஸ் வழி".
- ஜந்தாவது வழியான "ஏரோதின் வழி" இம்மூன்று வழிகளும் வடக்கு திசையில் உள்ளது.
- ஆறாவது வழியான "புனித ஸ்தேவானின் வாயில்" அல்லது "சிங்கத்தின் வாயில்"
- ஏழாவது வழியான "தங்கவாயில்" இந்த இரண்டு வழிகளும் கிழக்கு திசையில் உள்ளன.
- எட்டாவது வழி "டங்வால்" தெற்கு பகுதியில் உள்ளது.

பழைய எருசலேம் நகரமானது நான்கு குடியிருப்பு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.இவற்றிற்கு செல்லும் பாதைகளில் இரண்டு பாதைகள் சற்று குறுகியதாக இருந்தாலும், நடந்து செல்வதற்கு ஏற்ற வகையில் உள்ளது. இந்த இரண்டு பாதைகளும் மிக முக்கியமாகக் கருதப்படுகிறது.

ஒரு பாதை ஜாஃபா வாயில் கதவிலிந்து மேற்காக நகரத்தின் நடுபகுதிக்கு செல்கின்றது. சிலுவைப்பாதையானது அந்தோனியா என்ற இடத்தில் ஸ்தேவாவின் வாயில் அருகே ஆரம்பித்து, இயேசுவை அடக்கம் செய்த இடம் வரையிலும் சென்று முடிவடைகிறது.

S.மரிய வர்க்கிஸ் M.SC ,**Pothkalan vilai.**




# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

★ திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி –முத்துகுமார்.லதா உசரத்துகுடியிருப்பு

★ நல்ல உடல் நலம் கிடைத்ததற்கு நன்றி – ஜெனோ ரெஜில்– திங்கள் நகர்

★ குடும்ப நலன் கிடைத்ததற்கு நன்றி – ஜெபஸ்டின் ராஜா– மணலிக்கரை

★ நினைத்த காரியம் நடந்ததற்கு நன்றி – செல்வராணி – பொழியூர்

★ வேலை கிடைத்ததற்கு நன்றி – சுனி– பாரசாலை

★ விசா கிடைத்ததற்கு நன்றி –ஹான்– கேரளா

★ திருமணம் நன்றாக நடந்ததற்கு நன்றி – சுந்தர் ராஜ் – மாத்திரவிளை

★ குடும்ப நலன் கிடைத்ததற்கு நன்றி – குமார் – கன்னியாகுமரி

★ நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி – கால்வின் கில்சன் – துறைகுடியிருப்பு

★ சுகப்பிரசவம் ஆனதற்கு நன்றி –கிரிஸ்பில்,ஏக்னஸ் –கண்டன்விளை

★ தொழில் முன்னேற்றத்துக்கு நன்றி – வில்சன், மைதிலி – குறும்பனை

★ தேர்வில் வெற்றி பெற்றதற்கு நன்றி – செல்வக்குமாரி,மைக்கிள்– சென்னை

★ திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – ஜான்சன்– பொற்பை

★ நோயிலிருந்து விடுதலை கிடைத்ததற்கு நன்றி– ஆன்றனி– இணையம்

★ சுகப்பிரசவம் ஆனதற்கு நன்றி – அல்வினி– குரும்பனை

★ திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – எமரென்ஸி, தோமாஸ்– புதுக்குறிஞ்சி

★ புதிய வீடு கிடைத்ததற்கு நன்றி – டேவிட்ஸ் – பொழியூர்

★ தொழில் முன்னேற்றத்துக்கு நன்றி – ஜாண்சன், தெஸ்ரொஸ்– இரவிபுத்தன்துறை

★ விசா கிடைத்ததற்கு நன்றி –பிரதீபன் – மரியநாடு

★ திருமண வரம் கிடைத்ததற்கு நன்றி – ரதிஸ்–மதுரை

★ குழந்தை பாக்கிய கிடைத்ததற்கு நன்றி –ராதிகா,ராஜேஸ்– மணலி

★ சுகப்பிரசவம் கிடைத்ததற்கு நன்றி – விமலா,வில்சன் – மதுரை

★ சகோதரனுக்கு குழந்தை பாக்கிய கிடைத்ததற்கு நன்றி –உஷா – பொற்பை

பங்குத்தந்தை

# தூய கன்னி மரியாவுக்கு மேலான வணக்கம் மரியாதை அவசியமா ( நமது திருச்சபையில் )



கத்தோலிக்க திருச்சபையானது என்று வாழும் தந்தையின் அன்பிலிருந்து பிறந்து காலப்போக்கில் கிறிஸ்துவால் நிறுவப்பட்டு தூய ஆவியில் ஒன்று சேர்க்கப்பட்ட ஏக கத்தோலிக்க திருச்சபை ஆகும். கத்தோலிக்க திருச்சபையிலிருந்து தன்னலத்தால் பிரிந்து சென்றவர்கள் சத்திய திருச்சபையின் படிப்பினைக்கு தவறாக கொள்கைகளை பரப்பி விசுவாசிகளை நமது திருச்சபையிலிருந்து பிரியத்தூண்டும் விதத்தில் சந்தேகத்தை ஏற்படுத்த கேட்கும் கேள்விகளுக்கான விளக்கத்தை திரு விவிலியத்தின் மூலம் அடிப்படை உண்மைகளை அறிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய உலகில் ஒவ்வொரு மனித உயிர்க்கு தாய் முக்கியமாக விளங்குகின்றாள். தாய் என்றால் அன்பு , தாய்மை என்றால் பரிவு. தாய் என்றால் தியாகம், இன்று நாம் அறிவியல் உலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். உலகில் எல்லா செல்வத்தை விட தாயன்புதான் சிறந்தது.இந்த அன்னையின் அருமையை எடுத்துரைக்க பக்கங்கள் போதாது. வார்த்தையும் கிடையாது.இறைமகன் இயேசுவை கருத்தாங்கிய அன்னையை நாம் எப்படி மேலான வணக்கம் செலுத்தாமல் இருக்க முடியும். நம் அன்னை மரியாள் இயேசுவை தன் உதிரத்தில் தாங்கி பெற்றெடுத்த அன்னை கருவறையில் உள்வாங்கும் முன்னரே இயேசுவை தனது இதயத்தில் பெற்றவள் நம் அன்னை மரியாள். அந்த அன்னைக்கு நாம் திருவிழாக்களும் சிறப்பித்து அன்னை புகழ்புகழ்மாலை சூட்டி நாம் மேலான வணக்கம் செலுத்துவது எவ்வளவு சாலச் சிறந்தது ஆகும். ஆனால் இந்நிலை இறை மகன் இயேசுவுக்கு மட்டும் சற்று வித்தியாசமாக இருந்தது. ஆனால் உதாரணமாக இஸ்ராயேல் மக்கள் காலத்தில் பழைய ஏற்பாடு முக்கியமா, புதிய ஏற்பாடு என்று கூறுவதுபோல திருமறையில் இரண்டுமே முக்கியம் தான். என அறிகிறோம். ஆனால் இறைமகன் இயேசுவை பெற்றெடுத்த **இயேசுவின் தாய்க்கு முதலிடமா, இயேசுவுக்கு முதலிடமா என்று கூறக் கூடாது. இரண்டு பேர்களும் தான் திரு விவிலியத்தில் முதலிடம் வகிக்கின்றார்கள்.**

தூய கன்னிமரியாவை கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மாதாவை போற்றி ஆராதனை செய்கிறார்கள் என்று வேறு சில கிறிஸ்தவ பிரிவினை சகோதரர்கள் பெந்தை கோஸ்து சபையினர் சொல்வது முற்றிலும் தவறான கொள்கை. கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மாதாவுக்கு மதிப்பளிப்பது உண்மை. லூக்காஸ் நற்செய்தியில் வேதவாக்குகளை நாம் வாசிக்கும் போது திரு விவிலியம் மாதாவுக்கு மதிப்பளிக்கிறது என்ற உண்மை தெரியும், நம் அன்னை மரியாள் விவிலியம் போற்றும் அன்னையாக திகழ்கின்றாள்.

**A.**மரிய பாக்கியசிலி, சங்கரன் குடியிருப்பு

# PUZZLES

1. 101-102=1 இந்த கணக்கு வரி தவறு.
இதில் ஒரு எண்ணை மாற்றினால் இந்த வரி, சரி.

2. இரண்டு அப்பா, மற்றும் அவர்களது மகன்கள் மீன் பிடிக்கிறார்கள். ஒவ்வொருவரும் ஒரு மீன் பிடித்தனர்.அவர்கள் திரும்பி வரும் போது கையில் 3 மீன்களே உள்ளது. எப்படி? அவர்கள் மீனை சாப்பிடவும் இல்லை. திரும்ப ஆற்றில் போடவும் இல்லை. எப்படி?

3. ஒரு பாலம் 20 நிமிடத்தில் உடைய போகிறது. 4 மனிதர்கள் பாலம் உடைவதற்கு முன் அதை கடக்க வேண்டும். அது ஒரு இரவு நேரம் மின்விளக்கு உதவியினால் தான் கடக்க முடியும் இரண்டு மனிதர்கள் மட்டும் தான் ஒருநேரத்தில் கடக்க முடியும். ஒரு படகு மட்டுமே உள்ளது.

A. மனிதன் கடக்க 1 நிமிடம் ஆகும்.
B. மனிதன் கடக்க 2 நிமிடங்கள் ஆகும்.
C. மனிதன் கடக்க 3 நிமிடங்கள் ஆகும்.
D. மனிதன் கடக்க 10 நிமிடங்கள் ஆகும்.

நான்கு மனிதர்கள் எப்படி பாலத்தை கடந்தனர்?

**S**.மங்களராஜ் **B.E**, பொத்தக்காலன்விளை.

*விடைகள்:*

1. $101-10^2=1$ 2 நம்பரை மேலே power-ல் போட்டால் சரி.
2. அங்கு 3 மனிதர்கள் தான் இருந்தனர். பையன், அவனுடை அப்பா, அவனுடைய தாத்தா.
3. A & B முதல் 2நிமிடங்களில் கடந்தனர். 2
A திரும்பி படகை கொண்டு வந்தான். 1
C & Dஅடுத்து படகில், பாலத்தை கடந்தனர். 13
B திரும்பி படகை கொண்டு வந்தான். 2
கடைசியில் A & B பாலத்தை கடந்தனர். 2

## சிந்தனைத் துளிகள்

வெல்ல முடியாத போராட்டத்தை தொடங்காதே
இன்பசிரிப்பே இல்லத்தின் ஒளி
பிரச்சினைக்கு தீர்வு அதை எதிர் கொள்வது
சுலபமானது எது சரியென்று அறிவது, கடினமானது அதை செய்வது
அறிவில்லாதவன் ஆசை சிறகில்லாத பறவை.

டே.கீர்த்திகா ,வெள்ளக் கோவில்.

## இதய அஞ்சலி



| | | |
|---|---|---|
| 7.9.13 | எமலி புஷ்பம் | பொற்பை |
| 11.9.13 | நம்பிக்கை ரோஸ் | பொற்பை |
| 16.9.13 | ஜெயசீலன் | பொற்பை |



## பாராட்டுக்கள்

மாவட்ட அளவிளான தடகளப் போட்டி இம்மாதம் 3.09.2013 அன்று தூத்துக்குடி தருவை மைதானத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் சீனியர் பிரிவில் எம்பள்ளி மாணவன் அருள் விஜய் நீளம் தாண்டும் போட்டியில் கலந்து கொண்டு முதல்பரிசு பெற்றான். அதேபிரிவில் மாற்றுதிறனாளி மாணவன் முத்துலிங்கம் 100 மீ ஓட்டத்தில் முதல் பரிசு பெற்றான். அதேபிரிவில் மகிழன் வட்டு எறியும் போட்டியில் இரண்டாம் இடம் பெற்று வர இருக்கும் மண்டல போட்டியில் கலந்து கொள்ள இருக்கிறார்கள் என மகிழ்வுடன் தெரிவிக்கிறேன். வெற்றி பெற்ற மாணவர்களை பாராட்டி பள்ளி தாளாளர் அருட்தந்தை. பபியான் ஜோசப் அடிகளாரும், பள்ளி தலைமை ஆசிரியை மார்கரெட் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினார்கள்.

நெல்சன் சத்தியராஜ், உடற்பயிற்சி ஆசிரியர்

## உயர்ந்ததும்.... பெரியதும்...

1. உயரமான அருவி ஜோக் அருவி
2. உயரமான அணை பக்ரா நங்கல்
3. மிகப்பெரிய மாநிலம் மத்திய பிரதேசம்
4. மிகப்பெரிய மசூதி ஜீம்மா மசூதி
5. மிகப்பெரிய குகைக்கோயில் எல்லோரா

S.செல்வ ஜெபர்ஷியா, பொற்பை



## தகவல் களஞ்சியம்

- அன்னை தெரசாவின் இயற்பெயர் ஆக்னஸ் கோன்கோ லோஜாக்வியு
- பறக்கும் பலூனில் ஹீலியம் வாயு பயன்படுத்தப்படுகிறது.
- உலகின் பழமையான மரம் பேரீட்சை மரம்
- இந்தியாவின் முதல் பெண் ஓட்டுநர் சுரேகா சங்கர் யாதவ்.
- சென்னைத் துறைமுகத்தல் மிதக்கும் காவல் நிலையம் உள்ளது.

A.ரெனிஷாலினி பொற்பை

## லாலா லஜ்பத்ராய்

பாஞ்சால சிங்கமெனப் போற்றப்பட்ட இவர் 1865-ல் பிறந்தவர். சட்டம் படித்து 1895-ல் வழக்கறிஞர் ஆனார்.ஆரிய சமாஜத்தின் முக்கிய தூணாக இருந்தவர். 1898-ல் காங்கிரசில் சேர்ந்தார். 1907-ல் பஞ்சாபில் தண்ணீர் வரி உயர்வை எதிர்த்துப் போராடியதற்காகக் கைது செய்யப்பட்டு மாந்தலேக்கு அனுப்பப்பட்டார். 1914-ல் இங்கிலாந்துக்கும், அமெரிக்காவுக்கும் சென்று, ஆறு ஆண்டுகள் பல இடங்களில் சொற்பொழிவாற்றினார். பல நூல்களை எழுதினார். 1920-ல் கல்கத்தா காங்கிரசுக்குத் தலைமை வகித்தார்.1928 - ல் சைமன் கமிஷன் லாகூருக்கு வந்தபோது அதை எதிர்த்துப் பெரிய ஊர்வலம் நடத்தினார். கூட்டத்தைக் கலைக்க நடந்த தடியடியில் லஜ்பத்ராயும் தாக்கப்பட்டார். அதன் விளைவாக 17-11-28-ல் காலமானார். சிறந்த பேச்சாளரான இவர் 'வந்தே மாதரம்' என்ற உருது நாளிதழையும் 'பீப்பிள்' என்ற ஆங்கில வார இதழையும் நடத்தியவர். மக்களுக்குப் பணி செய்வதற்காகவே ஒரு பணியாளர் கழகத்தையும் ஏற்படுத்தியவர்.

புகழ் பெற்ற இந்தியர்கள்

## நினைவில் வைத்துக் கொள்

மிக மிக நல்ல நாள் – இன்று
மிகப்பெரிய வெகுமதி – மன்னிப்பு
மிகவும் வேண்டாதது – வெறுப்பு
மிகப் பெரியதேவை – சமயோசிதபுத்தி
மிகக் கொடிய நோய் – பேராசை
நம்பக் கூடாதது – வதந்தி
ஆபத்தை விளைவிப்பது –அதி க பேச்சு
செய்யக்கூடாதது – தவறுகள்
செய்ய வேண்டியது – உதவி
உயர்வுக்கு வழி – உழைப்பு
நழுவ விடக்கூடாதது – வாய்ப்பு




டே.நிஜிதா
வெள்ளக் கோவில்

## மனிதனின் முதல் பாஷை

'சைகை' என்பார்கள். அது உண்மை இல்லை. அழுகையே மனிதனின் முதல் பாஷை என்பதை குழந்தைகளைக் கவனித்தால் தெரிந்து விடும். அது பேசிப் படிக்கும் வரை,தன் தேவைகளை அழுகையின் மூலமாகவே வெளிப்படுத்தும். சில குழந்தைகள் அழுது அடம் பிடிக்கும் போது கண்ணீரே வராது. அது நம்மை ஏமாற்றும் போலி அழுகையாகும். ஆனால் பிறந்த குழந்தைகளுக்கு சில மாதங்கள் வரை, அழுதாலும் கண்ணீர் வராது. இதற்கு கண்ணீர் சுரப்பி வளராததே காரணமாகும்.

S.அந்தோணி செல்வ ராஜா பொற்பை

## தெரிந்து கொள்ளுங்கள்...

★ உலகத்திலேயே மிகப்பெரிய சிலை சுதந்திரச்சிலை. அமெரிக்காவில் நியூயார்க் துறைமுகத்தின் முன் ஒரு சிறு தீவில் உள்ளது. இது பெண் வடிவமாக ஆக்கப்பட்டுள்ளது. இச்சிலையின் ஆள்காட்டி விரல் மட்டும் இரண்டரை மீட்டர் நீளமுள்ளது.

★ எக்ஸ் கதிர்களின் பயரை ரன்ட்கன் என்பவர் கண்டு பிடித்தார். ஒளிக்குப் பதிலாக எக்ஸ் கதிர்களைக் கொண்டு படம் பிடித்தால் உடலிலுள்ளே உள்ள உறுப்புகள் அதில் தெரியும்.

★ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு யாழ் என்ற பெயருடன் விளங்கி வந்த இசைக்கருவிதான் இன்றைக்கு வீணை என்று வழங்கப்படுகிறது. பிரசித்திப் பெற்ற இசைக்கருவிகளில் ஒன்றான இது 17ம் நூற்றாண்டில் தஞ்சாவூரில் இரகுநாத மன்னர் அரசாண்ட காலத்தில் உருவாக்கப்பட்டது.



# குட்டீஸ் கார்னர்

ஹலோ குட்டீஸ், போன மாதம் காலாண்டுத் தேர்வு எல்லாம் எப்படி நல்லா எழுதியிருக்கிறீர்களா? விடுமுறையில் நல்லா மகிழ்ச்சியாக இருந்தீங்களா? தேர்வு நன்றாக எழுதி இருப்பீர்கள். அதில் நல்ல மதிப்பெண்கள் கிடைக்க நம் திருக்கல்யாணத்தாயை வேண்டிக் கொள்ளுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்...

- கி. அஸ்வின், கி.ஜோஸ்வின், பிரகாசபுரம்







ஹாய் குட்டீஸ்,

இங்கே இருக்கும் இந்த இரண்டு படத்திற்குமிடையே எத்தனை வித்தியாசங்கள் இருக்கிறது என்று இந்த தடவையும் சொல்ல மாட்டேன். உங்கள் திறமையை மதிப்பெண்ணிட்டு நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்.

12 வித்தியாசங்கள்............. 100
7 வித்தியாசங்களுக்கு மேல்......... 75
5 வித்தியாசங்களுக்கு மேல்......... 50
1 வித்தியாசம்.............. !!??




வேறென்ன?
ஃபெயிலுதான்....

இந்த கடிகாரத்தில் நேரம் இப்பொழுது எத்தனை என்று கண்டுபிடியுங்கள் பார்ப்போம்...





# ஹெல்த் கார்னர்

**வாழைப்பழம் :**

உடலுக்கு சக்தி தரக்கூடியது. நன்றாக பழுத்த பழத்தை உண்ணுதல் அவசியம். இதன் மூலமாக மலச்சிக்கல் நீங்கும், பசியின்மையைப் போக்கும். செரிமானத்திற்கும் நல்லது. வயிற்றுவலி , குடல்புண் நோய்களையும் குணமாக்கும் தன்மை கொண்டது.

**ஆப்பிள் பழம் :** உடலுக்கு ஆரோக்கியத்தைத் தரக்கூடியது. நாள்தோறும் ஒரு ஆப்பிள் சாப்பிட்டு வருபவர்கள், மருத்துவரை தேடிச்செல்ல வேண்டியது இல்லை என்று சொல்வார்கள். இப்பழம் மூளை நரம்புகளை வலுவுறச் செய்கிறது. நல்ல உறக்கத்தையும், உடலுக்கு உற்சாகத்தையும் தரவல்லது.

**காரட் :**

உணவில் சேர்க்கப்படும் கேரட், உடலிலுள்ள எலும்புகளுக்கு உறுதியளிக்கும் உணவாக அமைந்திருக்கிறது. நாள்தோறும் ஒரு கேரட்டினை பச்சையாகவே சாப்பிடுவது, பற்களுக்கு வலுவூட்டுகிறது. கண்களுக்குக் குளிர்ச்சியைத் தருகிறது. தோலிற்குப் பலத்தைச் சேர்த்து, உடல் அழகு பெறுகிறது.

கொலஸ்ட்ரால் கட்டுப்பாட்டிற்கு வரவும், இதயநோய் மற்றும் இரத்த குழாய்களில் அடைப்பு போன்ற வியாதிகள் குணமாகவும் வாரத்திற்கு இருமுறை காலையில் வெறும் வயிற்றில் சுத்தமான அருகம்புல் சாறு, வாழைத்தண்டு சாறு போன்றவற்றில் ஏதாவது ஒன்றைப் பயன் படுத்தி வந்தால் ஏழு மாதங்களில் பூரண குணம் பெறலாம்.

# உலகப் புகழ் பெற்றவர்கள்

## பேடன் பவல்

உலகம் முழுவதும் இன்று பரவியிருக்கும் சாரணர் இயக்கத்தைத் தொடங்கிய ஆங்கிலேயரான இவர் 1857-இல் பிறந்தவர். 1876-ஆம் ஆண்டு ராணுவத்தில் சேர்ந்த இவர் இந்தியாவிலும் ஆப்கானிஸ்த்தானத்திலும் பணியாற்றியுள்ளார். 1908-ம் ஆம் ஆண்டு சாரணர் இயக்கத்தைத் தொடங்கினார். இவரது தங்கையான ஆக்னிஸ் என்பவர் துணையுடன் பெண்கள் சாரணர் இயக்கத்தை 1910-ல் தொடங்கினார். சாரண இயக்கம் பற்றி இவர் எழுதிய நூல் அந்த இயக்கத்தினருக்கு வேத புத்தகம் போல் உள்ளது. பல பட்டங்கள் பெற்றுப் புகழுடன் வாழ்ந்த இவர் 1941-ல் காலமானார்.



# இரால் மீன் குழம்பு

**தேவையான பொருட்கள் :**

இறால் – 1/2கிலோ ; தேங்காய் பால் – 1/2 கப் ; இஞ்சி, பூண்டு விழுது – 1 டேபிள் ஸ்பூன் ; பெரிய வெங்காயம் – 2 ; தக்காளி – 2 ; மிளகாய்தூள் – 1 டேபிள் ஸ்பூன் ; தனியாதூள் ; 1 டேபிள் ஸ்பூன் ; மஞ்சள்தூள் – 1/2 டீஸ்பூன் ; முந்திரி பருப்பு தூள் – 1 டீஸ்பூன் ; பச்சை மிளகாய் –2 ; கறிவேப்பிலை – 1 கொத்து ; எண்ணெய் – தேவையானது ; உப்பு – தேவையான அளவு.

**செய்முறை :**

இறாலை சுத்தம் செய்து லேசாக உப்பு சேர்த்து வேக வைத்துக் கொள்ளவும். வாணலியில் எண்ணெய் விட்டு கறி வேப்பிலையை தாளித்து இஞ்சி , பூண்டு விழுது போட்டு வதக்கவும். வெங்காயம் சேர்த்து சிறிது நேரம் வதக்கவும். தக்காளி , மசாலாதூள்கள், ப.மிளகாய் , உப்பு சேர்த்து நன்றாக கிளறி தண்ணீர் விட்டு வேக விடவும். பின்பு அதனுடன் வேகவைத்த இறாலை சேர்த்து சில நிமிடங்கள் கொதிக்க விடவும். கடைசியாக தேங்காய் பால் சேர்த்து 5 நிமிடம் கொதிக்க விட்டு இறக்கவும்.



## மிகப்பெரிய ஏரி

# தெரிந்து கொள்வோமா....

உலகில் மிகப்பெரிய ஏரி அமெரிக்காவுக்கும் கனடாவுக்கும் இடையில் உள்ள லேக் சுப்பீரியர் என்னும் ஏரியாகும். இந்த ஏரி 32,000 சதுரமைல்கள் பரப்பளவு உடையது, இது ஆஸ்திரியா நாட்டின் பரப்பளவுக்குச் சமமானது, 400 மைல்கள் நீளமுள்ள இந்த ஏரிக்கு 200 ஆறுகளில் இருந்து தண்ணீர் வருகிறது. பொதுவாகவே இந்த ஏரியில் அலைகள் அதிகம் இல்லை என்றாலும் மழைக் காலத்தில் பெரும் அலைகள் ஏற்பட்டு சுற்றிலும் உள்ள நிலத்தை அரித்துக் கொண்டே போகின்றன. இதனால் , இந்த ஏரி விரிவடைந்து கொண்டே போகிறது. இந்த ஏரியின் மூலம் நீர் போக்குவரத்து நடைபெறுகின்றன.

–குமார், கோவை

## செம்டம்பர் மாத சரியான விடைகள்

**இடமிருந்து வலம் :** 1. பணியாளர்கள் (17:10) 5. கைம் பெண் (18:3) 9. சக்கேயு (19:2) 13. அமைதியும் (19:38) 17. மகனை (20:13) 21. மோசே (20:11) 25. அறை (22:11)

**வலமிருந்து இடம் :** 2. இரங்கும் (17:13) 6.செல்வர் (18:24) 10.மீட்பு (19:9) 14.கற்களே (19:40) 18. சொத்து (20:14) 22. முடிவு (21:9)

**மேலிருந்து கீழ் :** 3. இறையாட்சி (17:20) 7. ஒட்டகம் (18:25) 11. படுகொலை(19:27) 15. இறை வேண்டலின் (19:46) 19. மூலைக்கல்(20:17) 23. இரவு (21:37)

**கீழிலிருந்து மேல் :** 4. வெள்ளப் பெருக்கு (17:27) 8. பார்வை (18:41) 12. ஒலிவம்( 19:29 ) 16. இறைவாக்கினர் (20:6) 20. சதுசேயர் (20:27) 24. ஆள் (22:10)

**கடந்த மாத குறுக்கெழுத்து போட்டியில் வெற்றிப் பெற்றவர்கள் :**

1.D. ஜோஸ்பின் மேரி தாசன் , கவரப்பேட்டை
2. S. சுரேஸ் கீதா, கவரப்பேட்டை
3. S. டோமினிக் பெனிட்டா, கவரப்பேட்டை
4. A. அனுஷா அகஸ்டின், கவரப்பேட்டை
5. A. அன்னபுஸ்பம் ராஜன், கவரப்பேட்டை
6. J. அனிதா ஜாண்சன், கவரப்பேட்டை
7. J. சேசுதுரை ஜென்ஸி ,கவரப்பேட்டை
8. D.கலா சகாயம் ,கவரப்பேட்டை
9. P.ஜோஸ்பின் ஸ்டெல்லா மேரிபீற்றர்,மாதர்பாக்கம்
10. தேவசகாயம் லூர்துமேரி,பிரகாசபுரம்
11. T.சுகிர்தமணி அன்பரசன், கவரப்பேட்டை.
12.W.ஜார்லின் பெமிளா வில்சன், கவரப்பேட்டை.
13.S.தினேஷ் எல்சி , கவரப்பேட்டை.
14.J.Sஅமல்ராஜ் லென்சியா, கும்மடிபூண்டி.
15. S.ராபின் பிரபா, சென்னை
16. D.அந்தோணி ஏசுதாசன் ,பொற்பை
17.குயின் ரோஸ் பாக்கியம், பொற்பை
18.கபிரியேல் மேரி,பொற்பை
19.S. மேரி லீலா ,பொற்பை
20.M.அந்தோணி கிறிஸ்டோபர்,பொற்பை
21.M. விஜய் ராஜா, பொற்பை
22.M. அமல சிறுமலர், பொற்பை
23. M. ரோஸ் பாத்திமா மேரி,பொற்பை
24.S.லூர்து ரெக்ஸ்,பொற்பை
25.A.ராஜன் தெரஸ்லின் , பொற்பை
26.Y.லூக்காஸ் மேரி ,பொற்பை
27.M.விலிட் எடிசன் , பொற்பை
28.A.சர்மிஸ்டா, பொற்பை
29.S.மெர்ஸி செல்வராஜ், பொற்பை
30.S. செல்வஜெபர்ஷியா , பொற்பை
31. A.ஜோசப் ஆல்வின், பொற்பை
32.J.லீமாரோஸ் , கொழுந்தட்டு.
33.P.ரவி, மயிலாடுதுறை.
34.M.செல்வக்குமார் ,சுதா, குற்றாலம்.
35.A. ஜாலிட்தா, ஒட்டன்சத்திரம்.
36. பெனோஜ் பிரின்சி,கிஷ்ணராஜபுரம்.
37.ஹேமா, திசையன்விளை.
38. A.விஜிலா,பொற்பை.
39.A.சகாய ஜெனிலா,பொற்பை.
40.A. டிவைனி ஸ்டார்லா, பொற்பை
41. A.அந்தோணிராஜேஸ்வரி, பொற்பை
42.J.சாரோன் அருள்ராஜ்,பள்ளிவிளை
43.S.நிர்மலா சந்தியாகு ராஜன், மார்கம்பட்டி
44.K.ஷனி, வள்ளியூர்
45.M.டேவிட் தேவராஜன், வெள்ளக்கோயில்
46. P.சந்தணத்திரவியம் , பொற்பை
47. S.சூசை மிக்கேல் சந்தன செல்வி
48.J. ஆர்லின்ஸ் ரோஸ்லின்மேரி , கும்மிடிப்பூண்டி
49. J. சுதா ராஜன், சென்னை
50. R. அசோக் பிரின்ஸியா, ஏரல்
51.P.மரிய தமிழ்செல்வி,மதுரை
52.R.ரவீல்டர் சுமதி, கும்மடிப்பூண்டி
53.**S.**ஜோஸ்பிரகாஷ் ,பொள்ளாச்சி
54.**A.**அந்தோணி சைனி, பொற்பை
55.**S.**ஜோஸ்பின், பொற்பை
56.**G.**ரெஜீனாள் மேரி ஆசிரியை, பொற்பை
57.**J.**டார்வின் ஜோர்ஜியா,பொற்பை

# வாழ்வு தரும் வார்த்தைகள் – அக்டோபர் – 2013

| தேதி | திருநாட்கள் | வாசகம் | வாசகம் |
|---|---|---|---|
| 1. | குழந்தை இயேசுவின் புனித திரேசாள் | செக் 8:20-23; | லூக் 9:51-56 |
| 2. | புனித தூதர்கள் | நெகே 2:1-8; | மத் 18:1-5.10 |
| 3. | புனித ஜெரார்டு | நெகே 8:1-4a.5-6. 7b-12 | லூக்10:1-12 |
| 4. | புனித அசிசி பிரான்சிஸ் | பாரூ 1:15-22; | லூக் 10:13-16 |
| 5. | புனித ப்ளோரா | பாரூ 4:5-12.27-29; | லூக் 10:17-24 |
| 6. | ஆண்டின் ஞாயிறு 27 | ஆபகூக் 1:2-3;2:2-4;<br>2திமொ 1:6-8; 13-14; | லூக் 17:5-10 |
| 7. | புனித செபமாலை அன்னை | யோனா 1:1 2:1-10 | லூக் 10:25-37 |
| 8. | புனித சிமியோன் | யோனா 3:1-10; | லூக் 10:38-42 |
| 9. | | யோனா 4:1-11; | லூக் 11:1-4 |
| 10. | | மலா 3:13-20b | லூக் 11:5-13 |
| 11. | புனித கென்னத் | யோவல் 1:13-15;2:1-2; | லூக் 11:15-26 |
| 12. | புனிதர்கள் பெலிக்ஸ்,சிப்ரியான் | யோவேல் 4:12-21; | லூக் 11:27-28 |
| 13. | ஆண்டின் ஞாயிறு 28 | நெகே 8:1-12; | லூக் 10:1-12 |
| 14. | புனித முதலாம் கலிஸ்டஸ் | உரோ 1:1-7; | லூக் 11:13-21 |
| 15. | புனித அவிலாதெரசா | உரோ 1:16-25 | லூக் 11:37-41 |
| 16. | புனித மர்கரித் மரியா | உரோ 2:1-11; | லூக் 11:42-46 |
| 17. | புனித அந்தியோக்கியா இன்னாசியார் | உரோ 3:21-30; | லூக் 11:47-54 |
| 18. | நற்செய்தியாளர் புனித லூக்கா | 2திமொ 4:10-17b; | லூக் 10:1-9 |
| 19. | | உரோ 4:13.16-18; | லூக் 12:8-12 |
| 20. | நற்செய்தி அறிவிப்பு ஞாயிறு | எசா 2:1-5;எபே 3:2-12; | மாற் 16:15-20 |
| 21. | புனித ஹிலாரியோன் | உரோ 4:20-25 | லூக் 12:13-21 |
| 22. | | உரோ 5:12.15b<br>17-19.20b-21; | லூக் 12:35-38 |
| 23. | புனித ஜான் கப்பிஸ்தரானோ | உரோ 6:12-18; | லூக் 12:39-48 |
| 24. | புனித அந்தோனி மரிய கிளார | உரோ 3:19-23; | லூக் 12:49-53 |
| 25. | | உரோ 7:18-25a; | லூக் 12:54-59 |
| 26. | | உரோ 8:1-11 | லூக் 13:1-9 |
| 27. | ஆண்டின் ஞாயிறு 30 | சீஞா 35:12-14.16-18;<br>2திமொ4:6-8. 16-18; | லூக் 18:9-14 |
| 28. | புனிதர்கள் சீமோன்,யூதா | எபே 2:19-22; | லூக் 6:12-19 |
| 29. | புனித நர்சீசுஸ் | உரோ 8:18-25; | லூக் 13:18-21 |
| 30. | புனித அல்போன்ஸ் ரொட்ரிக்ஸ் | உரோ 8:26-30; | லூக் 13:22-30 |
| 31 | | உரோ 8:31b-39; | லூக் 13:31-35 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 3 | | | | ■ | | | | | 2 |
| | | 7 | | | 6 | 9 | | | |
| | 27 | 13 | | | | | | | |
| | | | 23 | ■ | 5 | | | | |
| | | | | | | | | | 4 10 |
| 15 | | | | | | 18 | | | 11 |
| | | | 14 | ■ | | | | | |
| | | 19 | | | 22 | | | 12 | |
| | | | 25 | | | | | 17 | |
| ■ | 8 | | | 26 | 24 | 20 | 16 | 21 | |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி

பதில்கள் தேடவேண்டிய பகுதி

லூக்கா : நற்செய்தி அதிகாரம் 22 முதல் யோவான் அதிகாரம் 4 வரை

விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.10.2013

## இடமிருந்து வலம்

1. இப்பொழுது ........... உடையவர் அதை எடுத்துக் கொள்ளட்டும்.
5. இயேசு சிலுவையில் அறையப்பட்ட இடம் எது?
9. உங்களுக்கு ........... உரித்தாகுக.
13. மோசே வழியாக எது கொடுக்கப்பட்டது?
17. கேபா என்றால் என்ன பொருள்?
21. முதல் அற்புதம் நடந்த ஊர் எது?
25. உம்மோடு பேசும் ....... அவர்.

## வலமிருந்து இடம்

2. இருள் என்ன செலுத்துகிறது?
6. அவருடைய ஆடைகளை ........முறையில் பங்கிட்டுக்கொண்டார்கள்.
10. அவர் அவர்களிடமிருந்து பிரிந்து ........ அடைந்தார்.
14. நான் ..... அல்ல
18. பெத்சாய்தா ஊரைச் சார்ந்த சீடர் யார்?
22. விரும்பிய திசையில் வீசுவது எது?
26. அறுப்பவர் என்ன பெறுகிறார்?

## மேலிருந்து கீழ்

3. இவனும் அவனோடு இருந்தவன் என்று கூறியது யார்?
7. எது ஒளி கொடுக்கவில்லை?
11. தொடக்கத்தில் இருந்தது எது?
15. வானிலிருந்து புறாவைப்போல இறங்கிவந்தது யார்?
19. நத்தனியேல் எந்த மரத்தின் கீழ் இருந்தார்?
23. கடவுள் உலகின் மேல்............ கூர்ந்தார்.
27. இன்னும் ............. அவரை நம்பினர்

## கீழிருந்து மேல்

4. இவனைத் தண்டித்து ............ செய்வேன்.
8. இவர் உண்மையிலேயே ..................
12. அவரிடம் ......... இருந்தது
16. சீமோன் பேதுருவின் சகோதரர் யார்?
20. இத்தொட்டிகளில் ........... நிரப்புங்கள்
24. யாக்கோபின் கிணறு இருந்த ஊர் எது?


ஜெபமாலையே
ஜெயம்
சாலமோன் கிராஃபிக்ஸ்,திசையன்விளை 9788675143